# மலரும் வாழும்

கவிதைத் தொகுப்பு

கவிஞர்.
மருதூர் ஜமால்தீன்

வெளியீடு
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்

# மனிதம் வாழும்

கவிதைத் தொகுப்பு

கவிஞர்.
## மருதூர் ஜமால்தீன்

வெளியீடு
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்

தலைப்பு - மனிதம் வாழும்
வகை - கவிதை
ஆசிரியர் - மருதூர் ஜமால்தீன்
முதல் பதிப்பு - 2019
பதிப்புரிமை - பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கிழக்கு மாகாணம்.
வெளியீடு - பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கிழக்கு மாகாணம்.

அச்சகம் - சிறீராம் அச்சகம்
(ரிங்கோ பிரிண்டர்ஸ்)
158, தபால் நிலைய வீதி,
திருகோணமலை.
trincoprint.2016@gmail.com
0262228677, 0777262225
F.b:Trinco Printers
பக்கங்கள் - 88
பிரதிகள் - 300

ISBN - 978-955-4628-70-0

## சிறந்த எழுத்தாளராகும் பாக்கியம் கிட்டட்டும்...

**மாகாணக் கல்விச் செயலாளரின் ஆசிச் செய்தி.**

கிழக்கு மாகாணக் கலாசார திணைக்களமானது கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் தமிழ் சிங்கள முஸ்லிம் உட்பட ஏனைய அனைத்து இனங்களினதும் கலாசார அடையாளங்களைப் பாதுகாத்து மாகாணத்திற்கு தனித்துவமான கலைகள், அதேபோன்று மேற்படி கலைகளில் ஈடுபட்டுவரும் கலைஞர்கள் மற்றும் அவர்களது பல்வேறுபட்ட படைப்புக்களுக்கு ஊக்கமளித்து கலாசார மேம்பாட்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அத்திட்டங்களில் ஒன்று மாகாணத்தில் வாழும் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கி வரும் எழுத்தாளர்களை முன்னிட்டு நடைமுறைப்படுத்தப் -பட்டுவரும் எழுத்தாளர் கைநூல் வேலைத்திட்டமாகும். அதன்படி 2019 ஆம் ஆண்டிலும் கலாசார திணைக்களத்தினால் எமது மாகாணத்தின் கலைஞர்களுக்காக இத்திட்டத்தை நடைமுறைப்- படுத்துவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந் நூல்களை வடிவமைத்த எழுத்தாளர்களின் சிந்தனை, பல்வேறு அனுபவங்கள் மற்றும் ஆளுமைப்பண்பு அத்துடன் ஆக்கபூர்வமான இரசனைகள், இந் நூல்களில் உள்ளடங்குகின்றது. இதுபோன்ற பல அனுபவங்கள் இலக்கிய பணிகளானது போசாக்கிற்கு மட்டுமல்லாமல் கலாசார மேம்பாட்டுக்கும் மிகவும் உறுதுணையாக அமைகின்றன. அதன் பிரதிபலன்கள் எதிர்காலத்தில் எமது எதிர்பார்ப்பாகவும் இருக்கலாம்.

குறிப்பாக இதனுள் எழுத்தாளர்களின் சிறுகதைகள், கவிதைகளின் எண்ணக்கரு மற்றும் விமர்சனங்கள் உள்ளெடுக்கப்பட்டிருப்பதுடன், அது எழுத்தாவணங்களின் சிறப்பம்சம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நூல்களை பார்க்கும் போது அதில் காணப்படும் திறமை அடிப்படையிலான படைப்புக்கள் மொழியால் அலங்கரிக்கப்பட்ட, பட்டை தீட்டப்பட்ட நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவிலான பெறுபேறுகளை சுட்டிக்காட்டுகின்றது. அது எழுத்தாளரின் கைவண்ணமாகும். எவ்வாறிருந்த போதிலும் இறுதியாக இந்த நூல்களை வரைந்த எழுத்தாளர்களின் எதிர்கால வாழ்வுக்கு நல்வாழ்த்துத் தெரிவிப்பதுடன், எதிர்வரும் காலங்களிலும் இதுபோன்ற நற்பணிகளை மென்மேலும் வளர்த்துக் கொண்டு ஒரு சிறந்த எழுத்தாளராகும் பாக்கியம் கிட்டவேண்டுமெனவும் பிரார்த்தனை செய்கின்றேன்.

ஐ.கே.ஜி.முத்துபண்டா,
செயலாளர்,
கல்வி அமைச்சு,
கிழக்கு மாகாணம்.

## மென்மேலும் இத்துறையிற் பிரகாசியுங்கள்...

### கிழக்கு மாகாணப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி.

**கி**ழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வேலைத்திட்டங்களில் கிழக்கு மாகாண எழுத்தாளர்களை ஊக்குவிப்பதும் ஒரு பெறுமதிவாய்ந்த பணியாகும். ஏனெனில் நூல் வெளியீடுகள் பொருளாதாரச் சுமை மிக்கதால் குறைந்த அளவிலேயே இடம்பெறுகின்றன. பல பிரதிகள் நூலுருப் பெறாமல் உறங்குநிலைக்குச் செல்கின்றன. இவற்றை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் முகமாக நூலுருவாக்கம், சிறந்த நூல் தெரிவு, நூல் கொள்வனவு என்பன கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் படுகின்றன. இந்த வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதியான நூல்களைப் பிரசுரிக்கின்ற 2019ஆம் ஆண்டிற்கான நூலுருவாக்கப் பணித்திட்டத்தினூடாக தங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு எழுத்தாளன் கற்றல், கற்பனைத்திறன், எண்ணம், அனுபவம், படைப்பாற்றல், ஆளுமை என்பவற்றைப் பயன்படுத்தி சீரான ஒழுங்கு முறைகளினூடாக ஒரு ஆக்கத்தைப் பிரசவிக்கின்றான். இவ்வாறான பிரசவங்களினூடாக பல்வேறு ஆக்க இலக்கியங்கள் எமக்குக் கிடைக்கப்பெறுகின்றன. இவை சமூகத்தின் பரிணாம வளர்ச்சிக்குரிய பண்பாடுகள் மற்றும் விழுமியங்களை எடுத்தியம்பி அடுத்த தலைமுறைக்கு அவற்றை எடுத்துச் செல்கின்றன.

2019 ஆம் ஆண்டு தமிழ் மொழி மூலம் நூலுருவாக்க- த்திற்குக் கிடைக்கப்பெற்ற இருபத்தி மூன்று (23) வகையான பல்வேறு ஆக்கங்களிலிருந்து எமது நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் ஒன்பது (9) ஆக்கங்கள் பிரசுரத்திற்கு உகந்தவையாகத் தகுதியான நடுவர் குழாமினால் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இங்கு இளம் எழுத்தாளர்களின் கன்னி வெளியீடும், மூத்த எழுத்தாளர்களின் விரிந்த எண்ண அனுபவ ஆக்கங்களும், அறிவியலும், தொழில்நுட்பமும், நாட்டார் இலக்கியம்,

சுயகவிதை, சிறுகதை, சிறுவர் இலக்கியம், புலமைத்துவம் சார் படைப்புக்கள் என பல்வேறு வடிவில் ஆக்க இலக்கியமாக நூலுருப்பெறுவது சிறப்பான ஒரு அம்சமாகும்.

**"மனிதம் வாழும்"** எனும் இந்நூலின் நூலாசிரியர் தனது விரிந்த சிந்தனை, பரந்த அனுபவம் என்பனவற்றுடன் கூடிய மொழிவாண்மை மூலம் இதனை படைத்துள்ளார். இந்த படைப்பும் வாசகர் நுகர்விற்கு மிகவும் பொருத்தமானது என நம்புகின்றேன். அந்தவகையில் இப்படைப்பினை மேற்கொண்ட நூலாசிரியரை பாராட்டுவதுடன் அவர் மேலும் இத்துறையில் பிரகாசிக்க வாழ்த்துக்களைச் தெரிவிப்பதோடு இத்தேர்விற்கு உதவிய நடுவர்கள் குழாத்திற்கும் **சிறீராம்** அச்சகத்திற்கும் இச்சந்தர்ப்பதில் நன்றியை நவில்கின்றேன்.

திரு. சரவணமுத்து நவநீதன்
மாகாணப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.

## முன்னுரை

நண்பர் மருதூர் ஜமால்தீன் அவர்கள் இரண்டு வகையில் என்னோடு நெருக்கமாகின்றார் அவரும் நானும் (முறையே 1960 - 1964) சமகாலத்தவர்களாக இருப்பதுபோன்று எங்களினது எழுத்தியல் பயணமும் 1981 களில்தான் ஆரம்பமாகின்றது.

நாம் இருவரும் பிறந்த மண்ணும் வீதியும் ஒன்றாகவும் பத்து வீடுகளுக்குள் எங்களது வீடுகள் அமைந்திருந்தமையும் நட்பு பாராட்டுவதற்கும் எழுத்தியல் தொடர்பிலான கருத்தாடல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் சமீபமான வசதிகளை ஏற்படுத்தியிருந்தது.

நாம் சாய்ந்தமருது முன்னேற்றக்கழகம் என்ற சமூக நலன்கொண்ட அமைப்பினையும் இஸ்லாமிய இலக்கிய வட்டம் மற்றும் மருதம் கலையிலக்கிய வட்டம் என்பவற்றை உருவாக்கி சேர்ந்து செயற்பட்டபோது அல்ஹுதா என்கின்ற காலாண்டு சஞ்சிகையும் வெளியிட்டு எங்களை சரியாகப் புடம்போட்டுக் கொண்டோம்.

நண்பர் ஜமால்தீன் திருமண உறவில் ஏறாவூரை வசிப்பிடமாகக் கொண்டவர் ஆயினும் எங்களிடையேயான நட்பும் எழுத்துப் பயணமும் இடைவெளியற்று இயங்குதளத்தில் இன்றுவரை தொடர்ந்தேர்ச்சியாக இருந்து வருவது எங்களுக்கு மன ஆறுதலான பக்கங்களாகும்.

நண்பர் ஜமால்தீன் சித்திவஸீலா என்ற நங்கையைத் திருமணம் செய்து, இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். பாத்திமா நஸீபா யாழ் பல்கலைக்கழகப் பட்டதாரி (நுண்கலை) இளையவள் பாத்திமா நதீறா (தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவி) முஹம்மது முர்ஷித் அலிகார் தேசியப் பாடசாலை ஏறாவூர் (உயர்தரம் கணிதப்பிரிவு) கற்று வருகின்றனர்.

சாய்ந்தமருதூர் ஏ.ஆர் மீராமுகையதீன் உம்முகுல்தும்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரரான மருதூர் ஜமால்தீன் தனது ஆரம்பக்கல்வியை சாய்ந்தமருது றியாளுள் ஜன்னா வித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வி யை கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையிலும், தனது மார்க்கக்கல்வியை தர்கா நகர் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக்கல்லூரியிலும் கற்றவராவார். இவரது சமூக சேவையினைக் கௌரவிக்கும் வகையில்

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான் எனும் கௌரவ பதவியையும் பெற்றுள்ளார். மற்றும் அஹதியா அறநெறிப் பாடசாலைகளின் அதிபராகவிருந்து வழி நடத்திய அனுபவத்தையும் கொண்டவர்.

எழுத்தியலுக்குள் வந்தநாள் தொட்டு இன்றுவரையும் சளைக்காது மரபுக்கவிதை, புதுக்கவிதை, சிறுகதை புனைவு, பாடல் இயற்றுதல் என்கின்ற பல்துறை ஆளுமைகளைத் தடம் பதித்துக் கொண்டு இருக்கின்றார். இதற்கப்பால் ஒரு மார்க்கப் பிரசங்கியுமாவார் இந்நூலுக்கு முன்னர் பத்து நூல்களை வெளிக்கொணர்ந்திருக்கிறார். 1) தடயங்கள் கவிதை (வெளியீடு 2008) 2) ரமழான் ஸலவாத் (வெளியீடு 2019) 3) கிழக்கின் பெருவெள்ளக் காவியம் (வெளியீடு 2010) 4) முஹம்மது (ஸல்) புகழ்மாலை (வெளியீடு 2011) 5) இஸ்லாமிய கீதங்கள் (வெளியீடு 2012) 6) தாலாட்டு (வெளியீடு 2015) 7) பத்ர் யுத்தம் (வெளியீடு 2016) 8) வலிகள் சுமந்த தேசம் (வெளியீடு 2017) 9) தீ நிலம் (வெளியீடு 2018) 10) வல்லூறின் வானம் (வெளியீடு 2019) இந்த நூல்கள் கொண்டிருக்கும் எழுத்தாக்கங்களை விடவும் அதிகளவான படைப்புக்கள் இன்னும் அவர்வசம் இருக்கின்றன. அதுவே பலதொகுதிகளைக் காண்பதற்குப் போதுமானதாகக் குவிந்து கிடக்கின்றன.

இவரது எந்தப் படைப்புக்களை எடுத்துக்கொண்டாலும் அவை நமது சமூகச்சூழலில் நலிவுற்றுக் காணப்படும் சிறுமைகளையும் புறக்கணிப்புக்களையும் சந்தித்ததனால் ஏற்பட்ட கோபக் கொந்தளிப்பின் வெளிப்பாடுகளாக அமைவதே அவரது சமூக அக்கறைக்குப் போதுமான எடுத்துக்காட்டாகும்.

அது மட்டுமன்றி தனது தமிழ் மொழிப் புலமையை வெளிக்காட்டுவதற்கு கரிசனை எடுக்காது இலகு மொழி நடையில் எல்லோரும் விளங்கிக்கொள்ளும் வண்ணம் எழுதும் இவரது ஆற்றல் அவருக்கான ஒரு வரமாக வாய்த்திருப்பதைச் சொல்லியாக வேண்டும்.

மனிதம் வாழும் என்கின்ற இந்த நூலின் தலைப்பே அவர் கொண்டிருக்கும் அசைக்கமுடியாத ஒரு நம்பிக்கையைப் பறைசாற்றுவதாகவே கொள்ள முடியும். ஏனெனில் மனிதன் நேசிக்கப்படுவதற்கும் பேசப்படுவதற்கும் முதலில் தேவைப்படுவது அவனுள் இருப்புக் கொண்டிருக்கும் மனிதத்துவம்தான் ஆதலால்தான் 'மனிதம் வாழும்' என்கிறார்.

உண்மையான மனிதத்துவம் அல்லது மானுடம் என்பது இனம், மதம், வர்க்கம் என்பனவற்றைக் கடந்து இருப்புக் கொள்ளவேண்டிய ஒரு பண்பாகும். இதனால்தான் மனிதர்கள் ஒரு குடும்பம் சகோதரர்கள் என்கின்ற மேலான கருத்துக்கு அவன் உரித்தாகின்றான்.

மனிதத்துவம் இல்லையாயின் மேதினியில் அமைதியிராது அன்பு மேற்கிளம்பாது நிம்மதியற்ற வாழ்வும் நேசப்பிணைப்புக்களும் துறந்து வாழ்வதினால் வாழ்க்கையில் என்ன சுவாரஸ்யமிருக்கும்? ஒன்றுமே இராது வெறுமையும் மன உளைச்சலும் கோப தாபங்களும் பழிவாங்கும் உணர்ச்சிகளும் தான் மலிந்து இருக்கும்.

இத்தகைய ஒருங்கின்மையானது தான் உலகின் பல பகுதிகளிலும் யுத்த அழிவுகள் மிதமிஞ்சிக் காணப்படுவதின் பின்னணியாகும். இதன் இன்னொரு பகுதியான மனசாட்சி, நீதி, நியாயம், சட்டம் போன்ற வாழும் நெறிகள் பிறழ்வுக்குள் தடம் புரண்டு உலகமே மனிதத்துவத்தை மரணிக்கச் செய்து சுழன்று கொண்டிருக்கின்றது இம்மனிதத்ததுவம் தேடலுக்குரிய ஒன்றாக இன்று மாற்றம் பெற்றிருக்கின்றது.

மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகிய இரு வடிவங்களிலும் புனைவு ஆற்றல் உள்ளவர் என்பதற்கு இந்நூல் ஒரு சாட்சியமாக இருக்கின்றது இதற்குப் பின்வரும் கவிதைகள் ஆதாரப்படுத்தி நிற்கின்றது.

மண்ணிலுமாசை வைத்து
  மனதிற் பொய் வேஷம் தேக்கி
கண்ணினாலன்பு கூறி
  கருத்தினால் பொய்யும் கூறி
உண்டிடப் பாய்ந்து செல்லும்
  ஊணிலா வேங்கை போலாய்
எண்ணிலே நாமிங்கானால்
  எதற்கொரு மனித நாமம்

(வாழ்வு எதற்கு பக் 11)

வீண் பேச்சைக் கொட்டு முன் நாவு
வினைவலையில் சிக்கிடுமே மேவு
ஆன்மாவைக் கெடுக்கும்
ஆபத்தில் ஒடுக்கும்
மிகையானால் இறைகைதி சாவு

(உயர்ந்திட வாழு பக் - 5)

மனிதா பொல்லாப் பொறாமையினை
புதைத்து மனதில் குமைவதனால்
புனிதம் இல்லை ''பொறாமைத்தீ
பொசுக்கும்'' வாழ்வைப் பாழ்படுத்தும்
நனிபல் பணிகள் புரியாமல்
நாளும் பொழுதும் திரிவதனால்
கனியாம் வாழ்வின் உன்னதமும்
கைக்கு வந்து வாய்த்திடுமோ

(தலை நிமிர்வாய் பக் - 22)

ஆயினும் இவரிடம் காணப்படும் சிறுகதை புனைவு, பாடல் இயற்றுதல் என்பனவைகளும் நூலுருப் பெற்று அவரது இயங்கியலையும் அடையாளத்தையும் பறை சாற்ற வேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பு தொடர்கதையாக இருக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கிறேன்.

**பன்னூலாசிரியர்**
**எம்.எம்.எம். நூறுல்ஹக்**
**ஆசிரியர் - சமவெளி**
**இணையத்தளம்**
**129B ஒஸ்மன் வீதி**
**சாய்ந்தமருது - 05**
**27/10/2019**

## மானுடம் பாடும் மருதூர் ஜமால்தீன்

மானுடம் பாடும் மருதூர் ஜமால்தீன் அவர்களின் "மனிதம் வாழும்" எனும் மகுடத்தில் அமைந்த கவிதைத் தொகுதி கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடாக மலர்வது மகிழ்ச்சி தருவதாகும்.

நான்கு தசாப்தங்களாக இலக்கிய உலகில் பேசப்படுகின்ற மருதூர் ஜமால்தீன் தேசிய பத்திரிகைகளாலும் சிறுகதை, கவிதை, கட்டுரை எழுதிப் பிரகாசிப்பவர், இஸ்லாமிய இலக்கியத் துறையிலும் ஸலவாத்து மாலை, இஸ்லாமிய கீதம், தாலாட்டு, வெள்ளைக் காவியம் போன்றவற்றை வழங்கியதன் மூலம் புகழ்பெற்றவர்.

மரபு, புதிது, சிந்து, குறும்பா என்று பல்வேறு வடிவ உத்தியில் கவிதை படைக்கும் ஆளுமை மிக்க கவிஞர் ஆர்பாட்டமில்லாது அமைதியான இருந்து சமூக அக்கறையோடு படைப்புக்களை தருபவர். ஈன நிலை கண்டு துள்ளுவதும், மானுட நேய விதைகளைத் தூவுவதும் அறநெறிக் கருத்துக்களை விதைப்பதும் இவரின் கவிதைகளின் அடிநாதமாகத் திகழும் மருதூர் ஜமால்தீனின் கவிதைகள் உயிர்த்துடிப்பானவை எளிமை, இனிமை, சொல்லாட்சி என்பன படைப்புக்களுக்கு வளம் சேர்ப்பவை. காட்சிப்படிமங்களினூடாக கவிதை சொல்லும் திறன் இவருக்கு வாய்த்திருக்கின்றது.

கையேந்திப் பிச்சைகேட்டுப் படிகளேறி
கன நாளாய் அலைகிறாள் சுலைகாஉம்மா
பையொன்றில் சிலபொருளும் உடுதுணியும்
படுத்துறங்கப் பாயொன்றும் சுருட்டிக்கொள்வாள்.
கால் கடுக்கக் கனநாளாய் நடந்தலைந்து
கனக்கின்ற சில்லறையை எண்ணிப்பார்த்து
மேல்தொங்கும் முந்தானையில் முடிந்துகொண்டு
மெல்லனவே நடந்தவளும் வீடு சேர்வாள்..
(மறுப்பார் உதவி தாரார்)

கவிதையை வாசிக்கும் போதே காட்சி கண்முன்னே விரிகிறது. தமிழைக் காதலியாய் உவமித்து எழுதப்பட்ட கவிதை ஓசை நயமும் வர்ணனைகளும் மிளிர்ந்து இன்ப சுகானுபவத்தைத் தரும் வண்ணம் அமையப் பெற்றிருக்கின்றது.

அன்பு கலந்திட அடிமையாகியென்
ஆசையைத் தீர்த்திடுவாள் - உள
ஆவலைப் போக்கிடுவாள்
பண்பில் பிள்ளையாய் பரிவிலன்னையாய்
பாசத்தை ஊட்டிடுவாள் - வாழ்வில்
பகையினைப் போக்கிடுவாள்
(தமிழ்க்காதலி)

சன்மார்க்க சீலர்களாக உத்தமர்களாக நடிக்கும் தலைமைகளைத் தோலுரிக்கும் கவிதை வரிகள் "இல்லை ஓட்டம்" என்ற கவிதையில் சிந்து வடிவில் அமைந்து உண்மை நிலையை வெளிச்சமிடுகிறது. சத்தியம் அழிந்து யுத்தம் நடைபெற தலைமகளே காரணமாக அமைந்து விடுவதைத் தெளிவுபடுத்துகின்றன கவிதை வரிகள்

சத்தியத்து நெறிமுறைகள் முறிப்பு - வாழ்வில்
சன்மார்க்க சீலர்களாய் நடிப்பு
உத்தமர்கள் போல் நடிக்கும் புத்தி மந்தத் தலைமைகளால்
யுத்தம்□ உலகில் நித்தம்

மஹாகவி உருத்திரமூர்த்தி தமிழுக்குக் கொண்டுவந்த என்ற குறும்பா வடிவத்திலும் கவிதைகள் படைத்திருக்கிறார். கவிஞர் ஜமால்தீன்.

எத்தனையோ பணியுனக்கு உண்டு
ஏய்த்திங்கு வாழாதே மண்டு
உத்தமனாய்ச் சேரு
உயர்வதிலே பாரு
புத்தியொடு நற்பாதை கண்டு

பல்வேறு வடிவங்களிலும் கவிதை தரும் ஆற்றல் மிக்க கவிஞர் ஜமால்தீனுக்கு நமது வாழ்த்துக்கள் மருதூர் ஜமால்தீன் சொற்சிக்கனத்தோடும் பொருட் செறிவோடும் அமைந்த செழிப்பான கவிதைகளை இன்னும் தரவேண்டுமென்பதே நமது பேரவா.

**கலாபூஷணம்,**
**பாஏந்தல் பாலமுனை பாறூக்.**

## மானுடம் பாடும் மருதூர் ஜமால்தீன்

மானுடம் பாடும் மருதூர் ஜமால்தீன் அவர்களின் "மனிதம் வாழும்" எனும் மகுடத்தில் அமைந்த கவிதைத் தொகுதி கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடாக மலர்வது மகிழ்ச்சி தருவதாகும்.

நான்கு தசாப்தங்களாக இலக்கிய உலகில் பேசப்படுகின்ற மருதூர் ஜமால்தீன் தேசிய பத்திரிகைகளாலும் சிறுகதை, கவிதை, கட்டுரை எழுதிப் பிரகாசிப்பவர், இஸ்லாமிய இலக்கியத் துறையிலும் ஸலவாத்து மாலை, இஸ்லாமிய கீதம், தாலாட்டு, வெள்ளைக் காவியம் போன்றவற்றை வழங்கியதன் மூலம் புகழ்பெற்றவர்.

மரபு, புதிது, சிந்து, குறும்பா என்று பல்வேறு வடிவ உத்தியில் கவிதை படைக்கும் ஆளுமை மிக்க கவிஞர் ஆர்பாட்டமில்லாது அமைதியான இருந்து சமூக அக்கறையோடு படைப்புக்களை தருபவர். ஈன நிலை கண்டு துள்ளுவதும், மானுட நேய விதைகளைத் தூவுவதும் அறநெறிக் கருத்துக்களை விதைப்பதும் இவரின் கவிதைகளின் அடிநாதமாகத் திகழும் மருதூர் ஜமால்தீனின் கவிதைகள் உயிர்த்துடிப்பானவை எளிமை, இனிமை, சொல்லாட்சி என்பன படைப்புக்களுக்கு வளம் சேர்ப்பவை. காட்சிப்படிமங்களினூடாக கவிதை சொல்லும் திறன் இவருக்கு வாய்த்திருக்கின்றது.

கையேந்திப் பிச்சைகேட்டுப் படிகளேறி
　　கன நாளாய் அலைகிறாள் சுலைகாஉம்மா
பையொன்றில் சிலபொருளும் உடுதுணியும்
　　படுத்துறங்கப் பாயொன்றும் சுருட்டிக்கொள்வாள்.
கால் கடுக்கக் கனநாளாய் நடந்தலைந்து
　　கனக்கின்ற சில்லறையை எண்ணிப்பார்த்து
மேல்தொங்கும் முந்தானையில் முடிந்துகொண்டு
　　மெல்லனவே நடந்தவளும் வீடு சேர்வாள்..
(மறுப்பார் உதவி தாரார்)

கவிதையை வாசிக்கும் போதே காட்சி கண்முன்னே விரிகிறது. தமிழைக் காதலியாய் உவமித்து எழுதப்பட்ட கவிதை ஓசை நயமும் வர்ணனைகளும் மிளிர்ந்து இன்ப சுகானுபவத்தைத் தரும் வண்ணம் அமையப் பெற்றிருக்கின்றது.

அன்பு கலந்திட அடிமையாகியென்
ஆசையைத் தீர்த்திடுவாள் - உள
ஆவலைப் போக்கிடுவாள்
பண்பில் பிள்ளையாய் பரிவிலன்னையாய்
பாசத்தை ஊட்டிடுவாள் - வாழ்வில்
பகையினைப் போக்கிடுவாள்
(தமிழ்க்காதலி)

சன்மார்க்க சீலர்களாக உத்தமர்களாக நடிக்கும் தலைமைகளைத் தோலுரிக்கும் கவிதை வரிகள் "இல்லை ஓட்டம்" என்ற கவிதையில் சிந்து வடிவில் அமைந்து உண்மை நிலையை வெளிச்சமிடுகிறது. சத்தியம் அழிந்து யுத்தம் நடைபெற தலைமகளே காரணமாக அமைந்து விடுவதைத் தெளிவுபடுத்துகின்றன கவிதை வரிகள்

சத்தியத்து நெறிமுறைகள் முறிப்பு - வாழ்வில்
சன்மார்க்க சீலர்களாய் நடிப்பு
உத்தமர்கள் போல் நடிக்கும் புத்தி மந்தத் தலைமைகளால்
யுத்தம்□ உலகில் நித்தம்

மஹாகவி உருத்திரமூர்த்தி தமிழுக்குக் கொண்டுவந்த என்ற குறும்பா வடிவத்திலும் கவிதைகள் படைத்திருக்கிறார். கவிஞர் ஜமால்தீன்.

எத்தனையோ பணியுனக்கு உண்டு
ஏய்த்திங்கு வாழாதே மண்டு
உத்தமனாய்ச் சேரு
உயர்வதிலே பாரு
புத்தியொடு நற்பாதை கண்டு

பல்வேறு வடிவங்களிலும் கவிதை தரும் ஆற்றல் மிக்க கவிஞர் ஜமால்தீனுக்கு நமது வாழ்த்துக்கள் மருதூர் ஜமால்தீன் சொற்சிக்கனத்தோடும் பொருட் செறிவோடும் அமைந்த செழிப்பான கவிதைகளை இன்னும் தரவேண்டுமென்பதே நமது பேரவா.

**கலாபூஷணம்,**
**பாஏந்தல் பாலமுனை பாறூக்.**

## நூலாசிரியரின் உரை

இறைவனின் படைப்பில் மனிதன் என்பவன் மகத்தானவன். அவனுக்கு இறைவனால் வழங்கப்பட்டிருக்கும் பொறுப்புக்கள், கடமைகளுடன் சேர்ந்த வாழ்வு என்பது ஓர் நேரிய பாதையின் வித்தாகும்.

மனிதன் என்பவன் மதத்தால், மொழியால், குலத்தால் பிரிந்து வாழ்வை அமைத்துக் கொண்டாலும் அவனிடம் இருக்க வேண்டியது மனிதம் என்கின்ற புனிதப் பண்புதான். இது இல்லையென்றால் அவன் மனிதன் என்ற சொல்லுக்கு அருகதையற்றவனாகிறான்.

இன்றைய மனித வாழ்வில் எங்கு எடுத்துக் கொண்டாலும் போட்டி, பொறாமை, பகைமை போன்ற தீய பண்புகளே மலிந்து காணப்படுகின்றன. இவைகள் ஏன் எதற்கு என்றும், இதற்கு விடைகாண முடியாதா என்ற ஏக்கம் மனிதத்தை நேசிக்கும் மனங்களை வாட்டுகின்ற ஒரு கவலையாகும்.

இதில் அநேக நல்லுள்ளங்கள் கவலை கொண்டாலும், எழுத்துப்பணியை ஆயுதமாகக் கொண்ட ஓர் கவிஞனின் உள்ளம் மானுடத்தை நேசிக்கும் மனிதப் பண்புகளுக்காக தனது கவிதைகளைத் தந்து கொண்டிருப்பான்.

கவிஞன் இல்லாத சமுதாயம் உண்மையான சமுதாயமாக இருக்க முடியாது. கவிஞன் என்பவன் ஓர் அறிஞனாக, அல்லது வைத்தியனாக, நிபுணராக அல்லது உத்தியோகம் சம்பந்தமானவனாகவோ இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை அவன் இதயத்தால் சிந்திப்பவன்.

கவிஞன் இல்லாத சமுதாயம் உண்மையான சமுதாயமாக இருக்க முடியாது ஏனென்றால் நாம் நம்மைச் சூழ இருக்கின்ற உலகத்தினைப் பார்க்கிறோம். நம்முன் நடக்கின்ற விடயங்களை நோட்டமிடுகிறோம் உரையாடுகின்றோம் ஆனால் கவிஞன் என்பவனோ வேறு வகையான யதார்த்த உலகில் இருக்கின்ற அவனது நடைமுறை உலகத்தில் நடக்கின்ற விடயங்களைக் கவனிக்கின்றான் பின்னர் எழுதுகின்றான்.

இந்த வகையிலேயே எனது எண்ணங்களை அனுபவங்களை, படிப்பினைகளை மனித சமூகத்தில் அன்பு, பண்பு, புரிந்துணர்வு

போன்றவைகளை வேண்டுதலாக முன்வைத்து எனது கவிதைகளைத் தந்துள்ளேன்.

கவிதையிலக்கியத்தில் எத்தனை நவீனத்துவங்கள் தோன்றினாலும் ஆரம்பகாலக் கவிஞர்களுக்கு கவிதைப் பாதைக்கான காலூன்றலைத் தந்தது மரபுக்கவிதைகள்தான் அதனை மறந்து விடாது எனது கவிதைகளும் சமுகத்திற்கான சிந்தனைகளாக, இன மத குல வேறுபாடுகளை மறந்து மனிதன் மனிதத் தன்மையைப் பேணி வாழ வேண்டுமென்ற எண்ணத்தைப் பிரதிபலிக்கின்றன.

இக்கவிதைகளை ஏற்றுப் பிரசுரித்து ஊக்குவித்த சகல தேசியப் பத்திரிகைகளுக்கும் இதனை நூலுருவாக்கம் செய்வதற்குத் தேர்வு செய்த கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் தேர்வுக் குழுவினர்களுக்கும் மாகாணப் பணிப்பாளர் அவர்களுக்கும் இந்நூலுக்கான சிறந்த அணிந்துரையொன்றை வழங்கிய கவிஞர் கலா பூஷணம் பாலமுனை பாறூக்சேர் அவர்களுக்கும் அன்புடன் முன்னுரை வழங்கிய பன்னூலாசிரியர் எம்.எம்.எம். நூறுல் ஹக் அவர்களுக்கும் பின் அட்டையின் குறிப்புரை தந்துதவிய ஆசிரியர் கலாபூஷணம் ää அப்துல் ஹலீம் அவர்களுக்கும் இந் நூலுருவாக்கத்துக்கு ஆரம்பம் முதல் இறுதிவரை வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் வழங்கிய ஏறாவூர் நகர பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் ஜனாப் äää நழீம் (நளீமி) அவர்களுக்கும் இதயபூர்வமான நன்றிகள் என்னிதயத்தில் என்றும் மறவாது வாழும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**-மருதூர் ஜமால்தீன்-**

## உள்ளடக்கம்


மனிதனாய் வாழ்ந்திட வருவாய்...17
இது என்ன கோலம்!...19
தமிழ்க்காதலி...20
ஏமாற்றாதே!...21
உயர்ந்திட வாழு!...22
மறுப்பார் உதவி தாரார்!...23
சிறந்த சாரதியாக!...24
நற்பேறாய்!...25
மனப்பீதி...26
எழுச்சிக்காய் உழைத்திடு!...27
வாழ்வு எதற்கு?...28
நன்றியற்றோர்!...29
இல்லை ஓட்டம்!...30
வல்லவன் யார்?...31
சேர்ந்து நாம் உழைப்போம்!...33
தாய் மீது அன்பு காட்டுவோம்!...35
உதவிடும் உறுதியெடு!...37
வெய்யிற் கடுமை ...38
மானம் பெரிது!...39
உறவு வளரும்!...40
ஞானம் பிறக்கிறது!...41
தலை நிமிர்வாய்!...42
அருளிறைவா! ...43
நெஞ்சம் துடிக்கிறது! ...44
மாண்புசேர் மனிதனாகிடு! ...45
கவிதைக் காதலி...47
ஒளியால் வெல்லும்!...48
சமூகப் பணி செய்வோம்!...49
தந்துவிடு! ...50
பல்சமூகம் வாழ்ந்திட பணி செய்வோம்!...51
வாழ்வு தாராய்! ...52
வழியனுப்பு...53
நல்லோரே சொந்தம் ...55
சுதந்திரம் வேண்டும்!...56
விடிவு என்று?...57
விடிவு கேட்டீரோ?...59
இதயத்தின் இருள் நீக்கு! ...61
உயர்வு தரும் ...62
தெளிவு வேண்டும் ...63
பெருமைக்குரியவன்...64
பணி செய்வோம்! ...65
நழுவிச் செல்லார்! ...66
உயர்ந்திடுவார்! ...67
ஓயாதா துப்பாக்கிச் சூண்டு!...68
மறைந்தும் வாழ்பவன்...69
எம்மைக் காக்கும்!...70
ஒற்றுமைக்காய் உழைப்பவரெங்கே?...71
மனிதா வாழ்ந்திடு!...73
செறிவாம் தமிழ்மொழி...74
முன்னெடுப்போம்!...75
மக்கள் நலன் பாடுவோம்...77
முகநூல்...79
அகதி வாழ்க்கை...80
பாதை மாற்றும் போதை...81
மனிதம் எங்கு சென்றதுவோ?...82
சந்தேகம் நீக்கு!...83
கண் திறக்குமா?...84
சீதனம் ஒழிக்க முயல்வாய்!...85
நீதி ஜெயிக்கும்!...86
வேண்டாம் வீதி விளையாட்டு...87

தேய்ந்திட்ட வொற்றுமை வாடிடாத் திகழத்
தேக்கிடு மனதினிலெண்ணம்
காய்ந்தது வுணர்வும் காலமும் வீணாய்க்
கழிந்ததே போரெனும் வினையால்!
மாய்ந்தது மனிதம் தாயகத் தீவில்
தினமொரு பொழுது மிதுவாய்ப்
பாய்ந்திடும் செய்தி வீழ்வதுவுடலாய்ப்
பார்ப்பதே யிதுயிப்போ நியதி.

மனிதனையிறைவன் படைத்தது வுலகில்
மனிதனாய் வாழ்ந்திடவன்றோ!
குனிந்திடும் கொள்கையில் மலிந்திட்ட பகையும்
குணமிலா மனிதனாய் மாற்றி,
சனியனாய்ப் போயிங்கு மிருகமாயானால்
சாந்தமும் வருமோ நாட்டில்!
நனிசிறப்பதுவும் குடி மகிழ்வதுவும்
நமக்கென்ற ஒன்றுமையன்றோ!

அறிவினையிறைவன் படைத்தது வுலகில்
அன்புடன் வாழ்ந்திட வன்றோ!
செறிபுகழ் வாழ்வு செழிப்பது நாட்டில்
செவிடன் ஊதிய சங்காய்.
மறியலிலின்று மானுட வாழ்வும்
மடிந்து வீழ்வதா பெருமை!
பறிமுதலுரிமை பீதியே தொடராய்
வாழ்விலிது யின்று நிலைமை.

குணமுளோர் வாழ்வில் குழிகளைத் தோண்டின்
குடிகளேயிதனால் வாடும்.
கணமுமிதுவே கருத்திற் செயலில்
கதியிலாச் சிலரின் விந்தையாய்

பிணங்களாய் நல்லோர் மனங்களுமுருகி
பிடிப்பிலா வாழ்வும் குறுகி,
வணங்கிடுமன்பும் பண்பும் பரிவும்
வீழ்ந்திங்கு மடிதலே காட்சி.

அழிக்கும் போர் வெறியி லழித்திட முனைவோர்
அறிவிற்கு நடந்தது யென்ன?
இழிநிலையிதனை உணர்ந்திடா மனமே
இனியுனக் காவதுயென்ன?
கழிந்திட்ட வாழ்வில் நடந்தயிவ்வவலம்
கனவாய் மறந்திடு நாட்டில்
ஒழித்திடு பகையை மனதின் போர்வெறியை
மனிதனாய் வாழ்ந்திட வருவாய்!

02/11/2008 சுடர்ஒளி

## இது என்ன கோலம்

போட்டி பொறாமை பகைமைகள்
பொல்லா மமதைத் தந்திரங்கள்
கூட்டிக் கொடுத்துக் கோள் மூட்டி
கூட விருந்து குழிபறித்து
காட்டிக் கொடுத்து சதிவலையில்
கணமும் வீழ்த்தும் புல்லருரை
கேட்டு சிந்தை சுமக்கின்ற
மனிதா இதுயென் கோலமிது?

அடுத்தவன் குறையை அறிந்திங்கு
அறிவிலாக் கதைகள் புனைந்திடுவான்.
கெடுக்கும் வழியைச் சொல்லியவன்
கெட்டா லொதுக்கி வைத்திடுவான்.
ஒடுக்கிக் கெடுக்கும் வழிமூலம்
ஒதுக்கும் அவனின் உரைக்கு நீ
மடுத்து செவியும் பழியேற்கும்
மனிதா இதுயென் கோலமிது?

உறவை யொதுக்கி நல்லோரை
உதவா மனுவாய் நிலைப்படுத்தி,
திறமையோர்க்குக் குழிபறிப்பான்
திறமை இலாரை ஏத்திடுவான்.
சிறந்த சேவை புரிவோரை
சிதைத்து அவரை யொதுக்குமவன்,
அறநெறி வீழ்த்தும் வழிநம்பும்
மனிதா இதுயென் கோலமிது?

இத்தரை மீதி லநியாயம்
இஷ்ட மாகப் புரிந்தோர்கள்,
சித்தங் கலங்கி சமூகத்தால்
சிறுமையோராய் சீல்வைத்தும்
சத்தியப் பாதை தெரியாமல்
சறுக்கி விழுந்தும் மறைந்திட்டார்.
நித்தமிதனை யெண்ணியினி
நிம்மதி வாழ்வைத் தேடிடுவாய்.

19/07/2008 சுடர்ஒளி

## தமிழ்க் காதலி

முல்லையரும்புபோல் முத்துச் சிரிப்பிலே
மோகத்தி லாழ்த்திடுவாள் - வாட்டும்
சோகமே போக்கிடுவாள்.
அல்லல் ஒழிந்திட ஆறுதல் மொழிகளை
அள்ளி வழங்கிடுவாள் - நெஞ்சில்
அமைதி தந்திடுவாள்.

அன்பு கனிந்திட அடிமை யாகியென்
ஆசையைத் தீர்த்திடுவாள் - உள
ஆவலைப் போக்கிடுவாள்.
பண்பில் பிள்ளையாய் பரிவி லன்னையாய்
பாசத்தை யூட்டிடுவாள் - வாழ்வின்
பகையினைப் போக்கிடுவாள்

அறிவு பெருகிட சிந்தை நிறைந்திட
ஆசானா யாகிநின்றாள் - அன்புத்
தாயாகி எனிற்கலந்தாள்.
செறிவினி லாக்கிநற் புகழைச் சேர்த்திடும்
சீர்தெய்வ மாகவந்தாள் - எந்தன்
சிறப்பினி லேமகிழ்ந்தாள்.

பாடும் புலமையிற் பாவலனாயெனைப்
பாரிலே யாக்கிவைத்தாள் - கவி
பாடிட வழி சமைத்தாள்.
ஓடும் சிந்தையிலுயர்வு படைத்திடும்
உண்மையைக் கூறிவைத்தாள் - எந்தன்
உள்ளத்திலே நிறைந்தாள்!

வாழ்வில் எனக்கிவள் வாய்த்த பெருமையினி
வாட்டிடும் இன்னலில்லை – எமை
வருத்திட யாருமில்லை.
ஏழ்மையாய் நானிப் பாரிலிருப்பினும்
எந்தனுக் கிவளே சொந்தம் - நான்
ஏற்றிடும் இனிய செல்வம் !

31/08/2008 சுடர்ஒளி

## ஏமாற்றாதே

சூறாவளி யென்னுமொரு சேதி
சுற்றியதால் மக்களெங்கும் பீதி.
ஆறாத கவலைகொண்டா ரன்று
அடுத்துவரும் சேதியென்ன வென்று!

பொருள்வேண்டக் கடைகளிலே நிற்பார்
பொருள் பெறச் சுணங்குவதால் சொற்போர்
இருள்வந்து விடுமுன்னே கூட்டம்
இனியென்ன செய்வதென்ற வாட்டம்.

வியாபாரி மார்களெலாம் பதுக்கல்
விலையேற்றி விற்றுவிட ஒதுக்கல்
துயரறியா இந்தமனப் போக்கு
துவண்டிடுவோர் கண்டுபொய் வாக்கு.

எரிபொருள், மா, கறிவகைகள் சுட்டி
எப்படியோ விலையேற்றும் தகைகள்
கரிசனையாய் உழைக்கும் முட மனமே
காலத்தால் அழியாயிக் குணமே!

அதிகார பரிகாரப் பேச்சு
அதிஷ்டமென நினைத்தவர்க்கும் போச்சு
சதிகாரக் கும்பலுக்கும் வருத்தம்
சாந்திவழி பூண்டோர்மனம் திருத்தம்.

ஏமாற்றும் பேர்வழியின் முன்னே
வருத்தாதே எமைஇயற்கைக் கண்ணே
சீமானாய் பதுக்குவோரைத் தாக்கு
சிறப்புறவே எம்வாழ்வை ஆக்கு!

4/01/2009 சுடர்ஒளி

**உயர்ந்திட வாழு!**

முத்துக்களா சிரிக்குமுன் பல்லு
முனைகின்ற சேதியென்ன சொல்லு
உத்தமனாய்ப் பேசி
உளறுவதை வீசி
நித்தமிங்கலைந்தால் உடையும் பல்லு.

நல்லோரைக் குறிவைத்துக் கேலி
நக்கலினால் தீது செய்யும் போலி
பொல்லாமை யுன்னால்
புரியுமா சொன்னால்
வகையாய்க் கரம் அம்புட்டால் காலி.

சந்தியிலே சாலையிலே குந்தி
சண்டித்தனம் செய்கின்றீர் உந்தி
உந்தனது வாழ்வு
உலர்ந்தாலோ தாழ்வு
நிந்தனையிங்குணர்ந்துபார் தம்பி.

வீண்பேச்சைக் கொட்டுமுன் நாவு
வினைவலையில் சிக்கிடுமே மேவு
ஆன்மாவைக் கெடுக்கும்
ஆபத்தில் ஒடுக்கும்
மிகையானால் இறைகைதி சாவு.

எத்தனையோ பணியுனக்குண்டு
ஏய்ந்திங்கு வாழதே மண்டு
உத்தமனாய்ச் சேரு
உயர்வதிலே பாரு
புத்தியெலாம் இறைவழியே கண்டு!

நல்லோனாய் வாழ் உலகை நோக்கு
நினைத்தபடி அலைவதனை நீக்கு
பொல்லாமையொழித்து
புன்மைவழியழித்து
நில்லாது லகில் நன்மை தேக்கு!

30.04.2014 முஸ்லிம் முரசு

## மறுப்பார் உதவி தாரார் !

கையேந்திப் பிச்சைகேட்டுப் படிகளேறி
கனநாளாயுழைக்கின்றாள் சுலைகாவும்மா
பையொன்றில் சிலபொருளும் உடுதுணி
படுத்துறங்கப் பாயொன்றும் சுருட்டிக்கொள்வாள்.

கால்கடுக்க நாள்முழுதும் நடந்துழைத்து
கனக்கின்ற சில்லறையை எண்ணிப்பார்த்து
மேல்தொங்கும் முந்தானையில் முடிந்துகொண்டு
மெல்லனவே நடந்துதன் வீடுசேர்வாள்.

சேர்த்த பணம் சிறுதொகையில் உணவுசெய்து
சேமிக்கும் பெட்டியிலும் சில்லறை போட்டு
ஓர்மையுடன் தனிமையைத் துணையாய்க்கொண்டு
ஒதுங்கியவள் வாழ்கின்ற உண்மை பெற்றேன்.

எனக்கென்றோர் குறையில்லை பிறந்தபோது
எழிலாக வளர்த்திட்ட பெற்றோர் மறைந்தார்
தனக்கு வாழ்த் துணையாக வாய்த்தோன் வேறு
தீராப்பெண் சபலத்தில் சிக்கிவிட்டான்.

சுயமாகத் தொழில் செய்து வாழ்ந்தேனிப்போ
சுமையினைத் தூக்கியுழைக்க முடியவில்லை
இயலும்வரை வாழுதற்கு உதவும் உள்ளோர்
இல்லாது இரந்தலைந்தேன் தவறே ஆனால்!

உள்ளாரும் இல்லாராய் நடிக்குமெங்கள்
உதவாத தீ மனத்தோர் இருக்குமட்டும்
முள்ளான தொல்லைகளாய் இரப்போர் தொடர்வரிதை
மறுப்போரும் உதவிதாரார் உணர்வாய் தம்பி

31/05/2015 சுடர் ஒளி

**சிறந்த சாரதியாக !**

வாகனத்தை விரைந்துடன் செலுத்தியெதிர்
வருவோரைத் திடீர் பயமுறுத்தி
விரைந்தோட்டம் பிடித்து
வினை பலதாலொடிந்து
வருந்துவதா வுந்தன் தலையெழுத்து!

பாதை தன் சொந்தமெனக் கொண்டு
பறந்தோடி எது முடித்தாய் மண்டு
அவசரமே நோக்கம்
அவதிவரின் ஏக்கம்
பாதையதன் ஒழுக்கம் பேண் நின்று!

பதறிச்செல் வாகனத்தால் தொல்லை
பயணத்தில் அமைதியொன்றே எல்லை
உதறாதே கூற்றை
உணர்ந்ததனை ஏற்று
நிதானித்து வாகனத்தில் செல்லு.

கண்மூடியோட்டுபவர் பட்டார்
கவனிக்காதோடி வுயிர் விட்டார்
எண்ணிடுவோர் குறைந்து
எதிர்ப்போரே நிறைந்து
உண்மையிதைக் கேளாதோர் கெட்டார்.

வாகனங்களிது அதிகரித்த காலை
வளமாகச் செல்வதற்கே சாலை
உகந்தமைதியூக்கு
உபத்திரங்கள் நீக்கு
தகைமை சேர் சாரதியாய் வாழு!

## நற்பேறாய் !

வணங்குமிடம் பள்ளி இறைசொத்து
வன்நெஞ்சோர் சிந்தையிலே பித்து.
குணங்கெட்டோர் பகைமை
குள்ளநரித் தகைமை
ஏன் கெட்டலைகின்றார் செத்து!

இறைவீட்டைப் பரிகசித்தல் பாவம்
இதயத்தில் உந்தனுக்கேன் கோபம்
கறைக்கண்ணால் பார்த்து
கயமையினைச் சேர்த்து
கருமங்கள் ஆற்றுதல் வீண் பேதம்.

இனப்பகையில் குளிர்காய்ந்தோர் காலம்
இன்னுமொரு வன்செயலா பாவம்
சினங்கொண்டு சீறி
சிந்தையும் நாறி
செப்பிடுதல் ஆபத்தின் ஓலம்.

இனம்பலதாய் வாழுமிந்நாடு
இழிசெயலால் உறவில் வரும் கேடு
அனலாய்த் தீ வார்த்தை
அறியாப் பழி தீர்த்து
இயம்புவதால் வாழ்வில் வீண் சூடு.

தீனோரைக் குறிவைத்து ஓடி
தீது செய்வோர் சமூகத்தின் கேடி
மதங்கொண்ட யானை
மேய்கிறதா சேனை
எறும்பு வரும் அதனுயிரைத் தேடி.

ஒற்றுமையே இம்மண்ணின் வேராய்
ஒன்றித்து வாழ்ந்துணரு நேராய்
எம்மதமும் இன்று
இயலுவதை நன்று
எடுத்தறிந்து வாழு நற்பேறாய் !

22.01.2014 முஸ்லிம் குரல்

மனப்பீதி !

புயல் வருமென்றொரு சேதி
புதிதாய் உலவிடும் பேதி
பயமென உள்ளங்கள் தொற்றி
பகர்ந்ததால் மக்கள் மனப்பீதி.

பணம் வளமுள்ளோர் பொருளை
பதுக்கிட முனைவோர் உண்மை
கணத்திலே மறைத்து வறுமை
கவனமாய் விதைத்துப் பகர்வார்.

குடிசையில் வசிக்கின்ற ஏழை
குடிபெயர்ந்திட இடம் தேடி
மடியிலே பணமில்லாத நன்
மனங்களைக் காண எழுவார்.

கொள்ளையடித்துப் பறித்து
களவு செய்துழைக்கும் கயவர்
அள்ளிட நேரம் பார்த்து
ஆவலாய்க் கண்ணி வைப்பார்.

கூலிவேலை செய்துழைத்துக்
குடும்பத்தைக் காக்குமேழை
கேலிசெய் இயற்கை மீது
கவலை கொட்டித் தவிப்பான்.

அரிசி மா கறி விலையேற்றி
அதிகமாயுழைக்கப் பதுக்கி
நரியெனக் கொட்டாவி விட்டு
நல்லோராய்த் தருணம் சிலர் பார்ப்பர்.

மனிதருக் கனீதி செய்து
மடியினை நிறைக்கும் தீய
சனியனைக் குறிவைத்தடிப்போம்
சமூகமும் சாந்தி பெறும்

15.02.2014 நவமணி

## எழுச்சிக்காய் உழைத்திடு !

எல்லோரும் ஒருதாயின் சேய்களென்று
எழிலாக வாழ்ந்திருந்தோம் இந்தநாட்டில்
பொல்லாமை புரிகின்ற பலராலி ங்கு
புகைமூட்டம் சூழ நாமும் வாழ்கின்றோமே!
செல்லாத போக்குகளால் நிம்மதியின்றி
செழிப்பின்றி இதயங்கள் பீதியிலாழ்ந்து
நில்லாதா நிம்மதியும் இனியுமென்று
நித்தமும் இம்மண்ணில் ஏங்குகின்றோம்!

ஒற்றுமையை வாழ்வுதனில் ஓங்கச் செய்யும்
உணர்வுள்ள நல்லோர் சொல் கேளா
பற்றின்றி நாமிங்கு வாழும்போது
பூமியிலே நல்லன்பிற்கு வழிதானேது?
கற்றுள்ள பாடங்கள் இன்றோ அதிகம்
கருத்தாக சிந்தையினில் ஊன்றியினியும்
புற்றுள்ள பகையினைக் களைந்து வாழ
புதிதாக ஓரணியிற் திரள்வோமிங்கு!

முன்னோரின் வரலாறு கண்டும் நல்ல
முயற்சியைச் சிந்தாது பதராய்ப்போனால்
பின்னாலே வரவுள்ள இளையோர் சமூகம்
பிடிப்பின்றி வாழ்ந்திங்கு தீது செய்வார்.
தன்னாலே முடிகின்ற பணியைச் சிந்தி
தாய்நாடு செழித்தோங்கி நாமும் வாழ
எந்நாளும் சமூகத்தின் விடிவைநோக்கி
எழுச்சிக்காய் உழைத்திட எழுவீர்தோழா!

21/3/2008 வாசம்

## வாழ்வு எதற்கு !

நீதி வீண்தடம் புரண்டு
நிம்மதியதில் மிரண்டு
சாதிப்பேய் தலையெடுத்து
சமத்துவம் சிறகொடிந்து
பாதியில் வாழ்வு வீணாய்
பாவங்களதற்கு ஊணாய்
நாதியாய் நாமிங்கானால்
நலிவதே புத்திசேர்க்கும்!

மண்ணிலுமாசை வைத்து
மனதிற்பொய்வேஷம் தேக்க
கண்ணினாலன்பு கூறி
கருத்தினல் பொய்யும் கூறி
உண்டிடப் பாய்ந்து செல்லும்
ஊணிலா வேங்கை போலாய்
எண்ணிலே நாமிங்கானால்
எதற்கொரு மனித நாமம்!

பழக்கமும் புதியதாகி
பாசம் மனவெறுமையாகி
வழங்கிடல் தீதென்றெண்ணி
வேற்றுமை பேசியெங்கும்
உழலுவோர் உலுத்தனாகி
உறவினை வெறுத்து நன்மை
இழந்துமே வாழும்போது
இழிநிலை பூணல் காட்சி!

இறையவன் மனுவென் பயிரை
இவனியில் விதைத்தானறிவில்
முறையற்று வாழ்தற்கல்ல
மடியுமுன் திறமை சேர்த்து
மறைவழி பற்றி வாழ்வில்
மாண்புயிர் இவனென்றுலகு
நிறை பணி செய்து வாழ்ந்தால்
நித்திலம் செழிக்கும் உண்மை!

நன்றியற்றோர் !

வாழ்வு உலகின் ஓடம்
வாழ மனுவுதவி தேடும்
பாழ்கள் ஆயின் வாடும்
படைத்தோன் தலையில் போடும்.

பணத்தைத் தேட நாளும்
பாவச்செயலில் மூழும்
குணத்தோர் வழியை ஏசும்
குடிகள் இதனால் தாழும்.

உறவில் நலவைப் போக்கும்
உயரும் வழியைப் பார்க்கும்
அறத்தின் வாழ்வை நீக்கும்
அமைதியிதனால் தாக்கும்.

துன்பம் வந்தால் துவழும்
துயர்கள் நீங்கின் மகிழும்
இன்பம் தேடி அலையும்
இழப்பு நேர்ந்தால் புலம்பும்.

உழைத்து செல்வம் பிடிக்கும்
உண்மையிங்கு நடிக்கும்
அழைத்துச் சொன்னால் ஒடிக்கும்
அறிவைக் கூறின் கடிக்கும்.

உலகின் வாழ்வையுவக்கும்
உடையோன் நினைப்பை மறக்கும்
கலகம் கண்டால் பதறும்
காப்போனருளை மறக்கும்!

21/10/2012 தினகரன் வாரமஞ்சரி

## இல்லை ஓட்டம் !

போர்தானே வாழ்வென்னும் கோஷம்
போர்குணத்து காலமிதால் தோஷம்
போலிமுலாம் பொய்ப்பூச்சால் போடுகிறார் நித்தமிங்கு
வேஷம் ; நாடே நாசம்!

படுகொலையைக் கூட்டுகிறார் ஏட்டில்
பதறுகிறார் தமிழ்மொழியார் நாட்டில்
துடுக்கான பாதகத்தால் சோதனைகள் வேதனைகள்
ஆட்சி ; இல்லை மீட்சி !

தலைமைகள் அலங்கரிப்பு பதவி
தருகின்றார் அறிக்கையிலே உதவி
மலைபோல எழுந்துயெமை ஆழ்த்தும் விலை வாசிகளால்
வாட்டம் ; இல்லை ஓட்டம்!

சத்தியத்து நெறிமுறைகள் முறிப்பு – வாழ்வில்
சன்மார்க்க சீலர்களாய் நடிப்பு
உத்தமர்கள் போல் நடிக்கும் புத்திமந்த தலைமைகளால்
யுத்தம் ; உலகில் நித்தம்!

பொறுமையினைப் பேணுமாறு பேச்சு- நாட்டில்
பொறுத்தாரின் உரிமையெலாம் போச்சு
சிறுமதியர் செருக்கதனால் பெரும்பதவி மான்மியங்கள்
தீய்ப்பு ; நாளும் மாய்ப்பு!

11/01/2009

**வல்லவன் யார் !**

இருளிலே சூழ்ந்திருக்கும்
இரவெனும் தேசமொன்றில்
அருமை இன்னுயிர்கள் யாவும்
அமைதியாம் ஓய்வு நாடி
கருமங்கள் முடித்து மெல்ல
கடமையாம் உறக்க மொன்றின்
தருணமும் பார்த்து ஈங்கு
அமைதியை நாடிச் செல்லும்!

இத்தகு நேரம் நோக்கி
இதமிலாப் பனிய ரக்கன்
நித்திரைக்காக ஏகி
நிம்மதி தேடுகின்ற
புத்தியாம் மானுடத்தை
புரிந்திடா வுயிரினத்தைக்
குத்தியே மயிர்விறைக்கும்
கூதலால் வாட்டி நிற்பான்!

உதறியே தூக்கமின்றி
ஊர்வன ஒடுங்கும் ; நடுங்கும்!
பதறிடும் கால்நடைகள்
பறவைகள், உயிரினங்கள்!
நிதமுமே பனியால் வாடி
நித்திரை யின்றி அல்லின்
கதியினை யெண்ணும் நெஞ்சம்
கதிரவன் வரவிற் கேங்கும்!

மண்ணிலே நெஞ்சும் மெய்யும்
மயங்கியே அமைதி பூணும்
புண்ணிய நேரந்தன்னில்
புதினங்கள் காட்டி வாட்டும்

பண்பிலாப் பனியரக்கன்
பரந்தெங்கும் ஊட்டுங் கூதல்
அன்பிலா அட்டகாசம்
அவதியில் உழல வைக்கும்!

ஆட்டியே படைத்து அல்லில்
ஆட்சிசெய் பனியை எங்கும்
ஓட்டிட புலரிக் காலம்
ஓங்கியே வருகை வெய்யோன்!
ஆட்சியை ஏற்ப அன்னோன்
அவனிக்கு வருதல் கண்டு
மூட்டிடும் பனியரக்கன்
முயன்றாங்கே ஒளிவான் ஓடி!

21/09/2008 சுடர்ஒளி

## சேர்ந்து நாம் உழைப்போம் !

ஆதியோ னீந்த வாழ்வில்
அனைவருக்கும் சமூகம் ஒன்றே!
பாதியாய் நாமின்றாகும்
பாவமேன் சிந்தனைக்குள்
மோதியே செல்லுங்காலம்
முற்றிலும் சோகராகம்
போதனை புரியும் நெஞ்சோர்
பொறுமையாய்க் கதறுகின்றார்!

எத்தனை பிரச்சினைகள்
ஏனிதில் ஆக்கினைகள்
புத்தியால் வெல்லும் வல்ல
புதியதோர் வழியைத் தேடிச்
சித்தமா யொற்றுமைக்கும்
சீர்வழி சமைக்கலாமே
சத்தியமிந்த மண்ணில்
சதிகளாய் ஆனதேனோ?

பலமொழி கொண்டயெங்கள்
புண்ணிய தேசம் வாழ்வோர்
நலமதைப் பேண வாழ்வில்
நீச்செயல் நீக்க மண்ணில்
குலமொழி பகைகளைந்து
கொள்கையில் கருத்திலுண்மை
இலக்கினை நோக்கி ஏக
இனிய நல் லுறவைத் தேடு!

வாழ்விதோ சிறிய காலம்
வந்திட்டோம் பகையெதற்கு
ஊழ்வினை யாலே யிந்த
உலகினில் பயன்களேது?

தாழ்வுதான் தீய நோக்கில்
தரணியில் நடந்த தென்றும்
ஏழ்மையி லாழ்ந்து வாழ்வில்
இழிவதே சூழ்ந்த துண்டு.

வேதங்களோதும் கூற்றில்
வெறும் குறை யுரைகளல்ல
நீதத்தின் சான்றுரைகள்
நேசத்தின் சிந்தனைகள்
சாதகம் பார்த்து வீணே
சாகசம் புரிந்திடாது
ஓதுவோ மேற்ற நோக்கில்
ஒற்றுமையென்று முண்டு.

கழிந்திட்ட வாழ்வு பதியில்
கனிந்தினி வருவதில்லை
அழிந்திட்ட உயிருடல்கள்
அழுவதால் கிடைப்பதில்லை
இழிசெயல் நீக்கு மெண்ணம்
இருக்கும் நல்லிதயத் தோராய்
செழிக்கயெம் அன்பு மாண்பு
சேர்ந்துயாம் உழைப்போம் ; வாரீர்!

22/11/2008 சுடர்ஒளி

தாய் மீது அன்பு காட்டுவோம் !

எத்தனை செல்வம் மனிதர்களுக்கு
எத்தகு பொருட்கள் கிடைத்தாலும்
இத்தரை மீதிற் தாயன்பே
இனிக்கும் பெரிய செல்வமதாம்!

பெற்றோரிருவர் இருந்தாலும்
பிள்ளை முதலில் உதவுவது
பற்றுடன் தாய்க்கேயுரித்தென்றே
பண்பு நபியின் மொழியுணர்வோம்.

பிள்ளைப் பேற்றில் தாயவளும்
பெரிதும் நொந்து தவிக்கின்ற
உள்ளமுணராப் பிள்ளைகளால்
உலகில் நன்மை விளைந்திடுமா?

குழந்தைப் பருவம் நாள் முதலாய்
குணத்தைக் கொட்டியெம்மாலவள்
இழந்த சுகத்தை யறிந்தோர் நாம்
இழிவாய்க் கருதுதல் முறையாமோ?

தாயொன்றிலையேல் உலகத்தில்
தானேயெவரும் பிறந்துவிடார்
சேய்களிதனை யுணர்ந்து விடில்
செகத்தினிலதிக நன்மை தரும்.

தாயின் பாதத்தடி மீதே
தன்மை சுவர்க்கம் கிட்டுமிதை
சேய்களுணர்ந்து வாழுமென்ற
செம்மல் நபியின் கருத்தறிவோம்.

இன்று பலபேர் தாயவளை
இழிவாயெண்ணியொதுக்கிப் பணி
நின்று செய்யா மறுக்கின்ற
நிலைமை நீங்கவுழைத்திடுவோம்.

அகத்தில் தாய்மீதன்பு வைத்து
அரியவுதவி புரிவோரை
இகமறுமையிலிறை யுதவிடுவான்
இதனையுணர்ந்து செயற்படுவோம்!

06/02/2011 வீரகேசரி

## உதவிடும் உறுதியெடு !

கட்டுமீறி வாழ்ந்திடும்
கனிவு கொண்ட சோதரா
துட்டுவொன்றே வாழ்க்கையாய்த்
துவளும் மனமேனடா!

பணத்தினாசை கூடிட்டாலுளப்
பண்பு தன்னைப் போக்கிடும்
குணத்தினோரை வினவிடு
கூடக் கதைகள் கூறுவர்.

வாழப்பொருள் தேவையே
வருத்தியுடலாலுழைத்திடு
ஆழப்பிறரை முனைந்திட்டால்
அவதிசேரும் வாழ்விலே!

செல்வமொரு சோதனை
சேர்த்தால் மனவேதனை
அல்லல் சேருமுள்ளத்தில்
அமைதி வாழ்வும் மறைந்திடும்.

கூலித்தொழிலாலுழைத்தினம்
கூழ்குடித்து வாழ் சுகம்
போலிப் பெருமை பெறுதற்காய்
பிறரை வாட்டியுழைக்காதே!

பெற்றோர், மற்றோர் உறவினைப்
பெருமை யுழைப்பே கொன்றிடும்
கற்றோர் நல்லோருறவதும்
கானல்நீராய் மறைந்திடும்.

உழைத்து வாழு உறுதியில்
உதவும் நல்ல நோக்கோடு
தழைக்கும் குணமும், உறவதும்
தரணியிலுன்னை யுயர்த்திடும்.

30/11/2008 சுடர்ஒளி

**வெய்யிற் கடுமை !**

வெய்யிற் கடுமை பார் மணலும்
அனலாய்க் கொதிக்குது பார்!

வியர்வையுடலில் மேனி நனைய
விரையும் மனிதர் மனமுருக
அயர்வோடசதி பொழுதும் தவிப்பில்
அமைதி வாழ்விற் கலைவான் மனிதன்.

செடிகள் கொடிகள் வாடியே மண்ணில்
செழுமை யொழிந்து மலர்களுதிர்ந்து
குடிசையில் வாழும் குணத்தோர் சூட்டில்
குடும்ப வியர்வையில் குளிக்கும் நிலையே!

கிணறுகுளத்தில் நீரும் குறைந்து
கிடைப்பவை போதா இருப்பதைப் பிரிப்பதில்
பிணக்குகளாகி உறவதுமுடைய
படைத்தோன் செயலைப் புரியாச் செயலே!

எங்களுள்ளம் அநியாய மிழைப்பதில்
எத்தனாய் அலைந்து வாழ்முறை தொலைத்தால்
மங்காயிறையின் வேதனையிதுவா
மனத்தாலுணர்ந்தே ஏகனைப் பணிவோம்!

## மானம் பெரிது !

கல்லா மனிதா உந்தன் இதயம்
கருணையில்லா நெஞ்சால் நீயும்
பொல்லாச் செயலில் புன்மை வழியில்
புதுமைத் தீங்கைப் புரிவது நன்றா!

மனிதம் சிறக்க வழிகள் தெரிந்தும்
மனதில் கறையே தினமும் சேர்த்து
புனிதம் நீங்கக் குழப்பம் செய்து
புனித வாழ்வில் நரகைக் கண்டாய்.

பிஞ்சின் உடலைப் பிய்த்து எறிந்து
பேயாய் மாறி பிணமாய் நாறி
நஞ்சாய் சமூகச் சாபம் சுமந்து
நித்தம் மிருகப் பித்தன் ஆனாய்.

உடலை மனிதப் போர்வை மூட
உள்ளம் மிருகக் குணத்தில் வாழ்ந்தால்
திடலுமுன்னைச் சுமக்கா தெறியும்
திருந்து இலையேல் அழிவே முடிவு!

மார்க்கம் பலது உலகில் வந்தும்
மாற்றமின்றி நீருமலைந்தால்
யார்க்கும் நன்மை பதியில் இல்லை
யாவும் உணரு மானம் பெரிது.

## உறவு வளரும் !

பார்வை அம்பெனப் பாய்ந்திடப் பார்க்கும் தீப்
பண்பு ஏன் பாவிமனிதா – உளப்
புண்ணதை நீக்க முனைவாய்!
கூர்மைப் பார்வையால் கொல்லாதே மனிதரை
கூடாது அச்செயலே – மனம்
வாடுவார் நல்ல மனிதர்!

பெருமையகம் பாவம் புன்மைத் தீச்செயல்
பெருகிடும் பார்வையினால் - துணிவும்
உருகிக் கரைந்து விடும்.
பொறுமை நற்குணம் சாந்தப் பார்வையே
பொன்னான மனிதனாக்கும் - என்றும்
உன்னதச் சிறப்பு வரும்!

உள்ளம் நல்லதாய் சொற்கள் சிறந்ததாய்
உரைப்பவன் மனிதனடா – வீண்
முறைப்பது கர்வமடா!
கள்ளம் கபடம் நிறை வஞ்சகப்பார்வை
கவலையின் பிம்பமடா – உனைத்
துயரத்தில் ஆழ்த்துமடா!

கனிந்த பார்வையில் அமைதி விளைந்திடும்
கவலையின் வேரறுக்கும் - நல்ல
உள்ளங்கள் உறவு சேரும்.
நனிசெயல் நீக்கி அன்பினை வளர்ப்பதால்
சமூகத்தில் உறவு வளரும் - நாம்
விரும்பிடும் மனிதம் கிட்டும்!

## ஞானம் பிறக்கிறது !

பசியும் பிணியும் வயதும் மூப்பும்
கசியும் இளமைக் கனவும் நிலையா
குஷியில் கழித்த கால முடிவில்
ஞான மொன்று பிறக்கக் கண்டேன்!

கல்விச் செருக்கில் கருணை மறந்து
சொல்லால் தீண்டிச் சொகுசில் மூழ்கி
அல்லல் புரிந்த நெஞ்சர் கண்டு
ஞான மொன்று பிறக்கக் கண்டேன்!

உறவும் எண்ணார் உணர்வை மதியார்
அறமும் செய்யார் அந்திம நாளில்
இறப்பை நினைந்து நொந்தார் கண்டு
ஞான மொன்று பிறக்கக் கண்டேன்!

## தலை நிமிர்வாய் !

மனிதா பொல்லா பொறாமையினை
புதைத்து மனதில் குமைவதனால்
புனிதம் இல்லை ; பொறாமைத் தீ
பொசுக்கும் வாழ்வை பாழ்படுத்தும்
நனிபல் பணிகள் புரியாமல்
நாளும் பொழுதும் திரிவதனால்
கனியாம் வாழ்வின் உன்னதமும்
கைக்கு வந்து வாய்த்திடுமோ?

உலகில் அற்ப ஆசைகளை
உளத்தில் தேக்கி தறிகெட்டு
கலகம் புரிந்து கதியிழந்து
கவிழ்ந்தோர் வாழ்வில் பன்னூறு!
நலன்கள் தள்ளித் தீமையினில்
நாளும் திளைத்து அதம்புரிந்து
வலமும் வந்தோர் சாபத்தின்
வலையில் சிக்கி நிலைகுலைந்தார்!

வாழும் வரைக்கும் மாசகற்றி
வாஞ்சை நேய பண்போடு
மீளும் வழியைக் கைக் கொண்டு
மேதினி மீது வாழ்ந்திடுவாய்!
மூளும் இன்னல் தொல்லைகள்
முற்றும் நீங்கின் உள்ளத்தை
ஆளும் ஏத்தும் நற்குணங்கள்
அவனி மதிக்கும் நெறி செல்வாய்!

எங்கும் எதிலும் பேராசை
எரிக்கும் காழ்ப்பு நீகொண்டால்
மங்கும் வாழ்வு ; வழி பிறழும்
மனதில் சாந்தி மறைந்து விடும்!
பங்கம் இல்லா வாழ்வேற்று
பதியில் இறைவன் ஈந்ததனை
தங்கம் என்றே நீ கொண்டால்
தரணி மீது தலைநிமிர்வாய்!

30/08/2009 சுடர்ஒளி

## அருளிறைவா !

உழைக்கச் செல்வேன் எந்நாளும்
ஊதி யந்தான் ஒழுங்கில்லை
பிழைக்கப் போதா வருவாயில்
பிள்ளை, துணைவி குடும்பத்தார்
தழைக்க மழையோ காணாத
தளிர்கள் கொடிகள் போல் வாடல்!

வாழ்வில் ஏழ்மை குடியிருப்பு
வறுமை, மிடிமை மடியவிலை
கூழ் குடித்து நாட்களையும்
ஓட்டும் அவலம் மாயவிலை
ஏழ்மை, தாழ்மை கொடுமையால்
ஏங்குங் கூட்டம் எங்கணுந்தான்!

போற்றி வளர்த்த குமர்கட்கு
பொற்புற மணவாழ் வளிக்கவுளம்
ஏற்றது முடிவு ; முயற்சியதும்
இளைத்தது ; ஆமாம் சீதனத்தின்
சீற்றம் பொங்கி எம் கனவை
சிதைத்து பதைக்க வைத்ததுவே!

கண்ணின் மணிபோல் ஒளிர்பிள்ளை
கல்வி தேட விழைகின்றார்
எண்ணத் துடிப்பு அனுப்புதற்கு
இல்லை தேட்டம் கைகொடுக்க!
மண்ணில் பிறந்தமை தப்பாமோ
மனதை அழுத்தும் துயரலைகள்!

அல்லல் ஏழ்மை நீக்கிடவே
அறம்புரி மாந்தர் அருகிட்டார்
நல்லோர், ஏழை நாட்டினிலே
நித்தம் வாழ்வில் நலிவுற்றார்
இல்லார்க் கீந்து உதவிடுவோர்
எங்கணும் பிறந்திட அருளிறைவா!

01.02.2009 சுடர்ஒளி

## நெஞ்சம் துடிக்கின்றது !

பொறுமை பிரிகிறது – நெஞ்சம்
புழுவாய் துடிக்கிறது.

உலகில் கலகம் மலிந்து உயிர்த்த
உறவு மழிந்து நலமு மொழிந்து
சலன மனதால் நிலையா வாழ்வும்
பலனே இன்றி அவமே கழிய
பொறுமை பிரிகிறது – நெஞ்சம்
புழுவாய் துடிக்கிறது.

கொள்ளை கொலைகள் கலையாய் மாறி
கொடுமை இடும்பை தழைத்து மேவ
உள்ளம் பதறி பீதி கொள்ள
உடலும் சருகாய் கருகும் நிலையால்
பொறுமை பிரிகிறது – நெஞ்சம்
புழுவாய் துடிக்கிறது.

கல்லா கசடர் பொல்லா வதைப்பால்
காலம் முழுதும் ஓடாய் உழைத்தும்
தொல்லை, வறுமை மிடிமை வாட்ட
துவளும் ஏழை நிலையை எண்ணி
பொறுமை பிரிகிறது – நெஞ்சம்
புழுவாய் துடிக்கிறது.

உணவுப் பஞ்சம் தொழிலுக் கச்சம்
உறவில் நலன்கள் தேக்கம் ; ஏக்கம்!
இணங்கும் உறவில் வறுமைக் கொடுமை
இயலா மைக்கு வித்து ஆவதால்
பொறுமை பிரிகிறது – நெஞ்சம்
புழுவாய் துடிக்கிறது!

26/04/2009 சுடர்ஒளி

அகம்பாவக் குணத்தில் மோதி
        அறிவற்றுலவும் மனிதா
திகழ்ந்திடும் கர்வ நோயின்
        தீதினால் நீயும் கொண்ட
சுகமும் தானென்னவுள்ளச்
        சுத்தத்தை நீக்கியன்பு
இகத்தினிற் தெரியா நின்றால்
        இகழ்ந்திடும் சமூக முன்னை!

உள்ளம் நற்சிந்தனை சிரசாய்
        உவந்திடாவுனது போக்கு
பள்ளம் நீ வீழ்தல் கண்டும்
        பாவமே தொழிலின் முதலாய்
துள்ளியே செய்யுமுந்தன்
        துடிப்பினால் நல்லோருள்ள
முன்னெனத் தாக்குண்டதனால்
        முனிவதையறிவாய் நீக்கு!

இத்தரை மீதிற் பெருமை
        இயம்பியே கர்வமீந்தார்
நித்த மிவ்வுலகிற் பட்ட
        நீசத்தைக் கண்டு கேட்டும்
சித்தமே கலங்கி நல்லோரைச்
        சித்திரவதை நீ செய்தால்
உத்தமா மனதாற் கொல்லும்
        உண்மையிவ்வுலகிலேற்பாய்!
அரசரும் அடிமையென்ன
        அகங்காரச் செருக்கு பூண்ட
தரணியின் செல்வர், நல்லோர்
        தகைமை சார் கற்றோர் வல்லோர்
திரண்டிடு மழக ரெவரும்

திகழ்ந்த தீப் பெருமையொன்றால்
சிரமமே கண்டார் வாழ்விற்
சீரற்றே மறைந்து சென்றார்.

போட்டி தீப் பொறாமை பகைமை
பொறுமையைப் போக்கும்குணமும்
மூட்டும் கோள் வன்மைப் பொய்யும்
முடிவிலா யேச்சும் சண்டை
வாட்டும் வீண் செயலால் மனதை
வருத்திடும் கர்வ நோயாம்
கேட்டுணர் வாழ்தலொன்றே
கேடிலா மனிதனாக்கும்.

பண்புசால் செயலினோடு
பதியில் நற்புனிதராக
உண்மையாய் வாழ்ந்து சென்ற
உத்தமர் பாதை தொட்டுக்
கண்ணதால், மனதாற் செயலால்
கனிமொழி பகர்ந்து வாழ
மண்ணிலே யுறுதி பூணு
மாண்புசேர் மனிதனாவாய் !

08/07/2010 விடிவெள்ளி

**கவிதைக் காதலி !**

பொன்னெழில் பூண்ட வனப்பினாள் - புது
போதையை ஊட்டும் விழியினாள்
கன்னங்கள் குழியச் சிரிப்பவள் - நெஞ்சில்
காதல் தீ மூட்டி எரிப்பவள்!

உண்ணுமிதழ் தேனை ஈபவள் - இன்ப
உணர்வினில் ஆழ்த்தி மகிழ்பவள்!
கண்ணிமை யாயெனக் கானவள் - எண்ணக்
காதலை என்றும் வளர்ப்பவள்!

பட்டுடை ஜொலிப்பில் மினுங்குவாள் - எந்தன்
பாவின் கரு வாக ஒளிருவாள்
சிட்டாகத் தாவும் துடிப்பினள் - என்றும்
சிந்தையில் மேவும் மாண்பினள்!

உள்ளமாம் தடாகத் தேனவள் - தெவிட்டா
ஒப்பற்ற விருந்து மானவள்
கள்ளமிலா வெள்ளை உறவிலே – கவிதைக்
காதலை என்றும் சுரப்பவள்!

அன்பிற்கு உறைவிட மானவள் - இதய
ஆசையில் முகிழ்ந்து எழுந்தவள்!
இன்சுகம் சுரப்புச் சுனையவள் - என்றும்
இகமதில் ஓங்கி ஒளிர்பவள்!

20/12/2008 சுடர்ஒளி

## ஒளியால் வெல்லும் !

நிலவு ஒளியைச் சொரியும் - விண்ணில்
நீந்தும் மீன்கள் மகிழும்
உலகு இருளைக் களையும் - நெஞ்சில்
உவக்கும் காட்சி பரவும்!

அருவி பாய்ந்து ஓடும் - அழகில்
அலைந்து தென்றல் வீசும்
உருகி நெஞ்சம் மலரும் - வாழும்
உயிர்கள் இதயம் குளிரும்!

கடலில் மீன்கள் பாடும் - உணர்வும்
கவிதை பாட நாடும்
திடலில் செடிகள் பூக்கும் - மலரும்
திறமாம் மணங்கள் சேர்க்கும்!

குழந்தை மனங்கள் துள்ளும் - இரவில்
குளிரும் உடலை அள்ளும்
பழகச் சுகமும் ஊறும் - விழிகள்
பார்த்து மனமும் தேறும்!

குளிர்மை தோய்ந்த நிலவும் - காலை
விடியல் கண்டு ஒளியும்
தளிர்கள் பூண்டு திங்கள் - நிலவைத்
தள்ளி ஒளியால் வெல்லும்.

இலங்கை மாதா அந்நியரின்
இலக்கில் சிக்கிச் சீரழிந்து
துலங்கும் நல்லோர் வழிதெரியாத்
தூங்கி நின்ற காலமது!

அன்னிய நாட்டோர் கரங்களிலே
அவதியில் நலிந்த யெம்நாடு
என்றும் நன்மை செய்தற்காய்
எழிலோர் சுதந்திரம் கேட்டதுவே!

இந்த நிலையில் விடிவிற்காய்
இனிது நினைத்த பல தலைவர்
சிந்தை செய்து உழைத்தார்கள்
சுதந்திர நாடு கிடைத்ததுவே!

இனிய தெங்கள் திருநாட்டின்
இனிய விடிவு தந்தோர்கள்
நனியி லென்றும் சிறப்புற்றார்
நாமு மவரைப் புகழ்கின்றோம்!

மண்ணி லென்றும் பெருமையுடன்
மகிழ்ந்து செழிக்கு மெம் நாடு
நண்ணும் வளங்கள் பெற்றதனால்
நம்மோர்க் கதனால் பலனாமே!

போட்டி பகையை வளர்த்ததனால்
பெரிதும் நாமும் துயருற்றோம்
மூட்டும் தீய பகையொழிந்து
முயன்று நலமாய்ப் பணிசெய்வோம்!

13/07/2009 சுடர்ஒளி

## தந்துவிடு !

விடியும் பொழுதே புலருகையில்
வினைகள் தனையே பரிசுகளாய்
இடியாய்த் தந்தே மறைகின்றாய்
இதுவா இன்றெம் தேவைகள்!

மனிதன் மனிதத் தன்மையினை
மறந்தே தீங்கு புரிகின்ற
அநியாயங்கள் யார் தடுப்பார்
அறிந்தோர் ஏனோ உறங்குகிறார்!

சொல்லில் செயலில் பேச்சுக்களால்
செகத்தில் நிம்மதி தோன்றலையே
கொல்லும் பண்பே இலட்சியமாய்
கொள்கையாகத் தொடர்கின்றார்!

பஞ்சம் பசியில் பகைப்புகையில்
பரிதவிக்கும் ஏழைகளோ
நெஞ்சம் பதறி வாழ்கின்ற
நிலையே நாட்டில் வேதனையாய்!

அன்பை பண்பை அறநெறியை
அளித்து வாழப் போதிக்கும்
இன்ப இதய நல்லோர்கள்
இன்னும் கிடையேல் நிலையென்ன?

ஒற்றுமையோடு நாட்டுமக்கள்
ஒன்றாய் வாழ வுழைக்கின்ற
பற்றுத லுள்ள மனமொன்றே
பதியி லெமக்குத் தந்துவிடு.

## பல் சமூகம் வாழ்ந்திட பணி செய்வோம் !

ஒற்றுமையூக்கி பற்றது தேக்கி
ஒன்றாய் வாழ்ந்திடும் போக்கு - இனி
ஒன்றிங்கிணைவதை யூக்கு!
குற்றமே வாக்காய் இற்றரை நிகழ்வாய்
குணத்திலேன் பகைமைத் தூறல் - இதில்
குடிகளும் கெட்டுப் பொய் நாறல்.

உலகுயர் படைப்பாய் உயிரிலும் சிறப்பாய்
உருவினில் வந்தாய் மனிதா – உன்
உணர்வினிலேனோ முனிவு.
கலகமே வாழ்வாய் கயமையே முதலாய்
கருத்தில் கொள்வது முறையா – வீண்
கர்வம் புரிவது சரியா?

தொட்டது சிறப்பாய் கெட்டவை யகற்றி
தூயோர் சிந்தனை சிறந்தார் - பணி
தொடர்ந்திங்கு சிறப்புற்று மறைந்தார்
விட்டவர் பணியைக் கண்டது வழியாய்
வீண் தீயுணர்வுடன் அலைந்தால் - நீ
வீணாய் செயலற்றிருப்பாய்!

மனிதனாயிங்கு வாழ்வதின் பயனை
மறந்தேயுருவினில் நின்றால் - நல்
மனிதம் காணாதலைவாய்.
புனிதனாயிங்கு வாழ்தலே இன்பம்
புன்மைச் செயல்தனைத் துறப்பாய் - இங்கு
புதுப்பணி செய்திடங் கொள்வாய்!

மார்க்கம் பலவாய் வந்தது மனதின்
மாசுகளகற்றிட வன்றோ – வீண்
மூர்க்கம் கொள்வதும் முறையோ
பார்த்திடுவுண்மை களைந்திடு தீதை
பகையற்று சிந்தை திறப்பாய் - நாட்டில்
பல் சமூகம் வாழ்ந்திட வுழைப்பாய்

14/09/2014 சுடர்ஒளி

## வாழ்வு தாராய் !

வயலுக்குச் சென்று ழைத்து
வருகின்ற போது மச்சான்
அயலினி லுள்ளோ ரெல்லாம்
அதிர்ச்சியாய்ப் பார்க்கி றார்கள்.
புயலென வெனது நெஞ்சம்
பொங்குதே கவலையாக
தயவினைத் தருவாரில்லை
தாய் தந்தை யாருமில்லை!

பெற்றோரை யிழந்து யானும்
பெரியவளான போதும்
உற்றோருமில்லை வாழ்வில்
உடன்பிறந்ததாருமில்லை.
கற்றிட வுணர்விருந்தும்
காத்திடயில்லார் நிலையில்
மற்றவர் வாசல் மிதியா
மானமா யுழைக்கச் சென்றேன் !

அங்குதா னுனது நெஞ்சின்
அன்பினைப் புரிந்த போது
எங்கிலு முன்னைக் கண்டு
இணையிலாக் காதலுற்றேன்.
தங்கமாய்க் காப்பே னென்றாய்
தாயென நம்பியுள்ளேன்.
நங்கையென் காவல் நீயே
மடல் கண்டோடி வாராய்!

மற்றவர் கூற்றுக் கெல்லாம்
மனதிலே முடிச்சுப் போட்டு
கற்றிட்ட தொழிலை நாமே
கவனமாய்ச் செய்து வாழ்வைப்
பற்றுடனமைத்து ஏழ்மை
பறந்திட வழிசமைப்போம்
சுற்றங்கள் கூடி வாழ்த்த
மங்கைக்கு வாழ்வு தாராய்!

23/07/2009 சுடர்ஒளி

வழியனுப்பு !

ஆசைக்கிளியே யென்
அழகான தங்க மச்சி
பொல்லாத கோபமென்ன – நீ
நில்லாது செல்வதென்ன!
ரோசமுள்ள ஆம்புள நான்
மானமுள்ள வாலிபன் நான்
என்னை நீ வெறுக்கலாமா – என்
தன் மானம் சிதையலாமா?

ஊரில தொழில் செஞ்சன்
ஒரு காசும் மிஞ்சுதில்லை
பேருக்காய் உழைத்திங்கே
பெருஞ்செலவு அதிகமாச்சு!
ஆரிட்ட சொல்வதென்று
அலை பாஞ்ச உள்ளத்தோட
உன்னிட்டச் சொன்னதாலா
உசும்பாது செல்லுகின்றாய்!

உழைப்பில்லாக் கோழையென்று
ஊராரும் திட்டி நின்றால்
நலமா சொல் வாலிபத்தில் - வீண்
கதையேதான் சனங்களுக்கும்.
பிழைப்புக்காய்ச் செல்லப்போறேன்
பிழையற்றுச் சேர்த்திடுவேன்
கெட்ட செயல் புரியமாட்டன்
கெடுவோரில் சேரமாட்டன்.

உள்ளத்தில் ஒன்ன வெச்சன்
உனக்காக வாழ்வதென்றேன்
பணங்காசு கேட்கமாட்டன் - பெண்
பாவத்தச் சுமக்கமாட்டன்.

கள்ளமாயெண்ணமில்லை
கருத்தில் ஏமாற்றுயில்ல
உயர்வான எண்ணங்கொண்டேன்
உழைத்துன்னை வாழவைப்பேன்

படித்திருந்தும் தொழிலில்லை
பண்பிருந்தும் பணமில்லை
முடிவெடுத்தேன் வேறு நாட்டிலுழைத்து
முன்னேறி வாழ்வதற்கு
பிடித்திட்ட உனை மறவேன்
பெற்றோரின் பணி மறவேன்
அன்பாக வழியனுப்பு - இறை
அன்பான துணை நமக்கு!

13/07/2014 சுடர்ஒளி

## நல்லோரே சொந்தம் !

தொட்டிலிற் குழந்தையெனத்
தூங்கியா னிருக்கையிலே
கிட்ட வந்து முத்தமிட்ட சொந்தமே - இன்று
கிடையாக விட்டுச் சென்றீர் வந்துமே!

சீருடை யணிந்து பள்ளிச்
சிறுவனாய்ச் செல்கையிலே
யாருடையான் என வியந்த சொந்தமே - இன்று
யாருமற்ற உறவிலானேன் நொந்துமே!

கல்விபெற வூக்குவித்தீர்
கதிநீங்கி தொழில் கிடைக்க
பட்ட மீட்டி அலையுகிறேன் சொந்தமே - வேலைக்கு
பட்ட கஷ்டம் நீங்கலையே வெந்துமே!

திறமை பூண்டுயர்த்தி யென்னை
தேவைக்குப் பயன்பெற்றீர்
சிறப்புணர்த்த மறந்துவிட்ட சொந்தமே – மனித
சீரிதுவா உள்ளந்தொட்டுச் சொல்லுமே!

ஏமாற்றும் சொந்த முமை
எண்ணாது நம்பியதால்
தாமாகக் கதறுகிறேன் சொந்தமே - இந்த
தரணியிலே நல்லோர்தான் சொந்தமே!

## சுதந்திரம் வேண்டும் !

சட்டம் ஒழுங்கை சந்திகளில்
சிரிக்க வைத்துத் தீதிழைப்போர்
கட்டம் சுமந்தயெம் தேசம்
காட்சியாய் மலிந்த காலமிது.
இட்டமாய் வீதியலைவோரின்
இம்சை பெருகி மக்கள் துயர்
பட்டிங்கலைதல் தொடர்கதையாய்
பரிதவிப்பதே சுதந்திரமாய்.

தமிழர் முஸ்லிம் மற்றினமெல்லாம்
தமது காலின் கீழெனப்போர்
உமிழ்ந்து உரையாலினப் பகையை
உடனிம் மண்ணில் அரங்கேற்ற
திமிராய் அலைந்து உறவொழிக்க
திகிலை மண்ணில் விதைப்போரை
சுகமாய் மடியில் தாலாட்டி
சுதந்திர மிதுவாய்ப் பிதற்றுகிறார்.

மக்கள் யாவரின் உரிமைகளை
மதித்து வழங்கிட பொறுப்பேற்றார்
பக்கம் சார்ந்த கருத்துக்களைப்
பகிர்ந்து அமைதி தியானத்தில்
மிக்க தீது புரிவோர்க்கு
முனைந்து முட்டுக் கொடுப்போராய்
இக்காலையெம் நாடுபெற்றால்
இப்பதி மீண்டும் போர்க்களமாய்!

துயரை தேச மக்களிங்கு
தொடர்ந்து ஏற்றல் வாழ்வென்றால்
அயலோர் நாட்டில் நற்பெயரை
அரசு பெறுதல் வெற்றியல்ல.
பயம் இடரற்று பல்லினமும்
பதியில் வாழக் கிடைப்பதற்கு
கயவர் தொல்லை களைகின்ற
கருத்தினர் மக்கள் கரம் வேண்டும்.

08/06/2014 சுடர்ஒளி

## விடிவு என்று ?

படித்துவொரு பட்டத்தைப் பெற்றுவிட்டேன்
பெற்றோரில் நல்லபெயர் எடுத்தும் விட்டேன்
மடியிலே பணமொன்றே எனக்கு இல்லை
மனம்போல வாழ்வின்னும் கிடைக்கவில்லை.

எனக்காக வுழைத்திட்ட பெற்றோரிப்போ
எந்தனின் உதவியை நாடுதல் தப்போ
தனக்காக வாழாத அன்னோர் பணிகள்
தரணியிற் சுடர்வீசும் முத்தாம் மணிகள்.

வீட்டிலே எனக்கிருக்கும் ஐந்து தங்கை
வஞ்சனைகளறியாத பருவநங்கை
காட்டியொரு மணமுடிக்க கருணையூறும்
காசு நகையில்லாமல் மனமோ மாறும்.

மழை வந்தால் சிறகடிக்கும் வீட்டின் கூரை
மறவாமலூர் சொல்லும் எங்கள் பேரை
அழைத்தெம்மை அணைக்கின்ற உறவுமில்லை
அடுத்தமாடி வீட்டிற்கும் நாங்கள் தொல்லை.

மூன்றுவேளை உணவுண்ண எங்களுக்காசை
முயற்சித்தும் முடியாமல் தாய்சுடும் தோசை
இந்நிலையை மாற்றிவிட மனதில் துடிப்பு
இல்லையொரு தொழிலென்று எண்ணம் முடிப்பு

வெளிநாடு சென்றுழைக்க தங்கையர் நாட்டம்
வேண்டாம்மா என்றெங்கள் தந்தை ஆட்டம்
இழிநிலையா என்னாளும் என்பாளன்னை
இல்லையடி காலம் வரும் என்பார் தந்தை.

இப்படியே எங்களது வாழ்க்கை யொன்று
இனிக்காமற் செல்கிறது விடிவு என்று
அப்பப்பா இளமையிலே வறுமை கொடுமை
அவலங்கள் சூழ்கின்ற வாழ்வும் முடுமை.

யாரிடத்தில் முறையிடுவோம் எங்கள் தோஷம்
யாரெமக் குதவிடுவார் எல்லாம் வேஷம்
பாரிலிந்த நிலையிலே எத்தனை வீடு
போரிலும் பகையிலும் ஆனதே நாடு!

23-29/2008 சுடர்ஒளி

விடிவு கேட்டீரோ!

மனிதப் பேரவலத்தை வாழ்க்கையாக்கி
        மண்ணிற்குள் மறைந்திட்ட சகோதரமே
புனித வாழ்வறியாது கழித்தோர் நீங்கள்
        புரியாத எமை விட்டுச் சென்றதென்ன?
இனிமையை மறந்ததா இயற்கையன்னை
        இதயமும் மறுக்குதே இழப்பு தன்னை
கனிவிலாப் பயணத்தில் சோதனையேற்று
        கடிதிலே சென்றிட்டீர் வருந்துகிறோம்!

உங்களின் வாழ்விலே விடிவு கேட்டு
        உரத்துநீர் அழுதிட்ட போதுமிந்த
தங்களின் சொகுசினைத் தோள் சுமக்கும்
        தலைவர்கள் எட்டியும் பார்த்தாரில்லை.
இப்போது நீலிக்கண்ணீர் வடித்து சொல்லால்
        இயம்பிடும் அன்பினைக் காணும் போது
பொங்கிடும் சினமுற்றார் இதயமுள்ளோர்
        பொறுத்தாலும் முடியாத கவலையுற்றோம்!

கல்விக்கும் வழியற்ற உமது வாழ்வில்
        கனவுதனைப் பரிசாகச் சுமந்து சென்றீர்.
நல்லதோர் தொழிலின்றி வரவுமின்றி
        நிறைந்திட்ட உணவின்றி உதவியின்றி
பொல்லாத பனியிலும் மழையும் வெயிலும்
        பொழுதுகள் சுமையாகக் கழிந்த வாழ்வாய்
நில்லாத மண்சரிவில் பறிகொடுத்தீர்
        நிம்மதியுன் சந்ததிக்கும் கிடைக்குமாமோ?

ஆட்சிகள் புரிவோரும் அஹிம்சையென்ற
        அடைமொழியை உழைக்கின்ற வழியதாக்கி
மீட்சிகளுக்குழைக்கா மனிதம் வாழும்

முறையகற்றி வீண் தாழ்ந்தோராக்கி
போட்டியும் பொறாமையை முதலீடாக்கி
புன்மையை வழங்கிடும் போக்கு கண்டா
சட்டென மறைந்திட்டீர் மலையக நெஞ்சே
கனவிலும் விடிவினைக் கேட்டிருப்பீரோ!!!

### இதயத்தின் இருள் நீக்கு !

மக்கள் மனநல்லெண்ணங்களின்
மதிப்பேயுந்தன் வெற்றியென
தக்கோர் சமூக நெறியறிந்து
தரணியிற் பணிகள் புரிவதுவே மிக்கோர்
சார்புக் கூற்றுயிமை
மிடுமையாக எண்ணியதால்
இக்காலை வாழ் மனுநெஞ்சம்
இருண்ட பாலையாகியதே!

என்றுமெதிலும் பொய்புரட்டு
எடுத்தசெயற்கெல்லாம் வாய்மிரட்டு
நன்றேயில்லாக் கொள்கையினால்
நனியில் விளையும் தீங்கெல்லாம்
நின்றே பரந்து சமூகத்தில்
நிலைத்து இன்னல் பெருகியதே
இன்றேனும் நல்லுணர்வற்று
இருப்பதிலமைதி வருமாமோ!

உள்ளம் மென்மையில்லாதால்
உணர்வின் நன்மையறியாது
கள்ளம் கபடம் பகைமூட்டி
கருத்தில் தீதாய் செயலேற்று
பள்ளம் வீழ்ந்து வாழ்கின்ற
பாவி மனிதா திருந்தாது
அள்ளுமன்பின் நெறிகாணா
அமைதி தேடல் முறைதானா!

உலகில் வாழ்ந்து சமுதாய
உயர்வே தனது லட்சியமாய்
கலகம் நீக்கிப் பணிசெய்த
கனிந்த நெஞ்சோர் வழியேற்று
புலரும் பொழுதில் தவறுணர்ந்து
புன்மை நீக்கி நல்லோனாய்
இலங்கும் நெஞ்சோடுழைப்பதுவே
இன்று சமூகம் வேண்டுவது !

22/06/2008 சுடர்ஒளி

## உயர்வு தரும் !

சமுதாயக் காவலரே
சமூகத்தைக் காக்கின்ற மனமுண்டேல்
தமக்கென்ற நிலையகற்றி
தாய் வழியுடன் பிறப்பாய் மக்களினை
உமதாக்கியப் பணிபுரிய
உயர்வேற்றும் கொள்கையினை மயப்படுத்தி
சமாதானத் தூதிட்டு
சாந்தமுடன் உழைத்திட முன்வருக!

இத்தரையில் எல்லோரும்
இயம்புவதிற் பயனில்லை சமூகத்தில்
உத்தமராய்ப் பெயரெடுத்தும்
உதவாது தன்பெருமை நிலைத்துவிட
சத்தியத்தை மறந்திங்கு
சறுகிய தீப்பாதையதன் இலக்கோடு
புத்தியுடன் அலைவதனை
புதைத்திடுவீர் இதயத்தில் நிறைவோடு!

மக்கள் மனம்
மறந்திங்கு வாழ்வோரின் பணியாவும்
எக்கணமும் அழிந்துவிடும்
என்பதனை நினைவிறுத்தி சமுதாய
அக்கறையே இலட்சியமாய்
அரும்பணிகள் செய்திட்ட முன்னோரின்
பக்கங்களைப் படித்தோதி
பணிபுரிவீர் நலம்பெறுவீர் உயர்வு தரும்!!!

## தெளிவு வேண்டும் !

பலயின மக்கள் வாழுமெம் நாடு
சில பல காலம் சீரற்றநிகழ்வாய்
கலக்கமும் பயமும் கொலையும் துயரும்
பலமேயில்லா நிலையே வாழ்வாய்
சலனம் கொண்டு மனங்களும் வாடி
நலவேயின்றித் தொடர்ந்தன பகையும்
வளங்கள் அழிந்து உயிர்கள் மடிந்து
வனப்பும் நீங்கி முடியா நிலையாய்!

இளமை தவழ்ந்த உறுதிக்கரங்கள்
இயக்கவெறியில் ஆயுதம் சுமந்து
மளமளவென்று வீதியில் மடிந்து
உள்ளங்கள் நொந்து உறுதியிழந்து
இழந்ததையெண்ணி உண்மை தெளிந்து
இன்பமாய் நிம்மதி அறிந்திங்குழைத்திட
பலரும் முனைந்து அமைதியும் காத்து
பகர்ந்தனர் ஒற்றுமை இலக்குமதுவாய் !

எல்லா வளமும் கொண்ட இலங்கையில்
எழுச்சி காணப் பலருமுழைத்து
பொல்லாய் பெயரை உலகில் நீக்கிட
பொறுமையின் நெஞ்சோர் உறுதிகண்டு
கல்லாய்ப் போன இதயம் கொண்டோர்
காவியுடையில் நஞ்சை விதைத்து
அல்லல் விளைத்து அழிவது பார்த்திட
அவதிப்படுகிறார் அடக்குவாரின்றி!

மார்க்கம் வந்தது மனிதம் தழைத்து
மாண்புடனொற்றுமை விடிவும் காண
மூர்க்கம் பூண்டு முழுப்பகை விதைத்திட
முடமனங்கொண்டோர் தடங்களறிந்து
தடுப்பாரின்றித் தொடுப்பாய் நின்றால்
தன்மை அழியும் புன்மை வெடிக்கும்
எடுங்களொற்றுமை செயலை வகுத்து
ஏய்ப்போர் திருந்த தெளிவைக் கொடுங்கள்

30.01.2014 விடிவெள்ளி

## பெருமைக்குரியவன் !

வியர்வை சிந்தியுழைத்து நல்
வாழ்வைத் தேட முனைந்திங்கு
அயர்வின்றித் தொழில் செய்யும்
அன்புத்தோழா உனையிங்கு
தயவின்றிப் பார்க்கின்ற
தலைவரென்போர் தாம் வாழ
உயர்வைத் தானே எண்ணுகிறார்
உன் பணியென்று அறிவாரோ?

வறுமையென்னும் மேலாடையை
வலுவாய்ப் போர்த்தி வாழ்வதினால்
திறமையற்ற மனுவாயுனைத்
தீங்கு புரிய நினைக்கின்றார்.
பறக்கும் புகழும் பட்டங்களும்
பதியில் அவருக்கும்மால்தான்
அறமாய் நீயுமீந்ததுவே
அன்னோர் நெஞ்சோ நிலச் சேறாய்!

உணவுக்குழைக்கும் கரங்களிலே
உயர்ந்த கரங்கள் உனதேதான்
மனமுமக்கில்லை என்றாலும்
பயிற்சியுண்டு உம்மிடத்தில்
குணத்தைப் பூண்ட வாழ்வினிலே
கொள்கையென்னும் உறுதியுடன்
இணங்கி வாழ சமுகத்தில்
இன்பம் தருவது நீயேதான்!

துன்பம் துயரம் எதுவரினும்
தூசாய் மாற்றும் துணிவுள்ள
தன்மை உண்டு வும்நெஞ்சில்
தரணி சிறக்குமிதனாலே
இன்றுவுந்தன் பணி யாவும்
இலையாயுதிர்ந்து போனாலும்
என்றோ ஒருநாள் உம் பெருமை
இந்த நாடு கண்டிடுமே!!!

## பணி செய்வோம் !

நேரம் வந்து எம்மோடு
நெருங்கியென்றும் நிற்பதில்லை
பாரம் கொண்ட வாழ்வுயிது
பார்போமொருகை துணிவுகொள்
யாரோ எவரோ வாழ்ந்தமுறை
என்ற சொல்லை நாம்கேளா
தூரம் செல்ல நேர்ந்தாலும்
துரிதாய்ச் சேவை புரிந்திடுவோம்.

வந்துவிட்ட வாழ்விதிலே
வாழும் காலம் சிறிதேதான்
நொந்து விட்டோமென்றில்லா
நோக்குமிலக்கும் நற்செயலில்
சிந்தை பூண்டு உழைத்திட்ட
சீர்மை நல்லோர் வழிதொடர
முந்தி நின்றால் நாம்தேடும்
முயற்சி யாவும் வென்றிடலாம்.

பள்ளம் மேடு படுகுழியின்
பாதையிங்கு தினமுண்டு
கள்ளம் கயமை கொடுங்செயலால்
கறையைப் பூண்டோர் மனங்கண்டும்
உள்ளம் மாறாவுறுதியுடன்
உண்மையேடாம் வரலாற்றை
அள்ளிச் சிந்தை தனிலேற்றி
அவனி சிறக்க வுழைத்திடணும்!

இனியுமெங்கள் சிந்தனைகள்
இயங்காதிருத்தல் முறையாமோ
பனியாய்க் குளிரும் எழுத்துப்பணி
பதியில் புரிந்து உழைத்தென்றும்
தனியாய்ச் செல்லும் நிலைவருமுன்
தரணி செழிக்கப் பணியீவோம்
நனியும் சிறக்கும் எம்மாலே
நன்மையென்றும் சமூகம் பெறும்!!!

பூங்காவனம் இதழ் 15

## நழுவிச் செல்லார் !

எத்தனை பேரையிங்கு
        எப்படி நம்பினாலும்
சத்தியக் கொள்கை யின்றி
        சறுக்கிடும் மனிதருள்ளார்!
நித்தமும் தருணம் பார்த்து
        நிம்மதி குலைப்பார் ; அ..தால்
இத்தரை மீது யின்று
        எவரையாம் நம்பி நிற்போம்?

எழுத்தினில் பேச்சினில் நல்ல
        எழுச்சியை ஊட்டுகின்றார்
பழுதில்லா சிந்தை பூண
        பகருவார் நெறிகள் ; சேர்ந்து
வழுவிடா மக்கள் தம்மை
        வழிகாட்டி நிற்பார் ; வழியில்
நழுவியே மறைந்து போவார்
        நட்டாற்றில் தள்ளி விட்டு!

அரசியல், சமூகத் தொண்டில்
        ஆழ்ந்தவர் என்பார் தம்மை
இரங்கியே இடுக்கண், இன்னல்
        நீக்கிடார் தக்கவேளை!
உரமொடு அமைந்த கொள்கை,
        உண்மையில் ஒளிரும் பற்றில்
சிறந்தவரானால் சேவை
        செய்குவர் ; நழுவிச் செல்லார்!

## உயர்ந்திடுவார் !

செய்யும் தொழிலே தெய்வமென
சகத்தில் தொடரும் நல்லவரை
பொய்யும் புரட்டும் நிறைந்துள்ளோர்
புகழாயின்னோர் பணிகள்தனில்
எய்துகின்றார் குற்றங்களை
எள்ளி நகையாடியிங்கே
மெய்யாமவரைக் கீழோராய்
மேவித்திரிந்தென் நலங்கண்டாய்?

கற்ற தொழில்கள் எதுவெனினும்
களவுபொய்கள் மோசடியாய்க்
குற்றமெதுவும் இல்லையெனின்
குணங்கொண்டதனைப் பொறுப்புடனே
பற்றுதலோடு செய்திடுவோர்
பதியில் நன்றே வாழ்வதனை
உற்றுணர்ந்து பாராமல்
ஒதுக்கி வைத்து எதுகண்டாய்?

தொழிலில் பதவி பட்டங்கள்
பெறுவோர் மட்டும் உத்தமராய்
எழிலாமெந்த வேதங்களும்
ஏந்தல் நல்லோர் கூறவில்லை
தொழிலில் தரங்கள் பாராமல்
திறமை சமூகவுணர்வோடு
பழிகள் இன்றிச் செய்வாரே
பதியிலென்றும் உயர்ந்திடுவார்.

## ஓயாதா துப்பாக்கிக் குண்டு !

ஓயாதா துப்பாக்கிக் குண்டு
ஓய்வில்லாத இதுயின்றோ வண்டு
ஓர்தாயின் மக்களென
ஓரினமாயன்றிருந்தோம்
ஒற்றுமையே இன்றெங்கும் துண்டு!

இலங்கைவாழ் மாந்தரெலாம் இன்று
இலக்கின்றி வாழ்க்கையினைக் கொன்று
இதமில்லாச் செயல்களினால்
இதயத்தில் பயங்களினால்
இறைவனையும் ஏசுகிறார் இன்று!

துப்பாக்கி தந்திடுமோ தேசம்
துர்குணத்தால் வந்திடுமோ நேசம்
தூயோர்கள் வரலாறு
தூதுகளாய் இகமிருக்க
தூக்கியதை வீசியதால் நாசம்!

எத்தனையோ உயிர்வீணாய் மண்ணில்
ஏங்கிடுவோர் மனமெல்லாம் புண்ணில்
ஏ! நண்பா நீ சிந்தி
எறிகின்ற படுகுழிகள்
எழுச்சியினைத் தந்திடுமா விண்ணில்!

குண்டுகளைக் கண்டுவிட்ட காலம்
குணவழியை மறந்ததினால் ஓலம்
குற்றங்களை நினைந்துருகி
குணவாழ்வின் ஒற்றுமைக்கு
குடும்பமென ஆகிவிட்டால் சீலம்!

நவமணி 1992

## மறைந்தும் வாழ்பவன் !

மக்கள் நலனை மானிடரில்
முன்னோர் வாழ்ந்த வழிமுறையை
தக்கோர் பணியைத் தூய்மையுடன்
தினமும் உணர்த்திக் கவிசெய்வான்.

நிலத்தின் நீரின் செல்வங்களை
நேர்மைத் துணிவில் உண்மைகளைப்
பலமாம் உலகின் உண்மைகளைப்
பகிர்ந்து பாவில் பணிசெய்வான்.

பிறந்து வாழ்ந்து மடிந்தோராய்
பிதற்றியுலகில் அலையாமல்
நிறைந்து நல்லோர் நெஞ்சமதில்
நிலைத்து வாழப் பிறந்தவனாம்.

இயற்கையழகை, இடர்களுடன்
இனிது புரிந்து துயரேற்றோர்
கயமை மலிந்தோர் தெளிவுபெற
கடமை செய்யப் பிறந்தவனாம்.

சமூக நோய்க்கு மருத்துவனாய்
சளையாத் தொண்டால் தோழமையில்
சமூக நோக்கில் தலைமகனாய்ச்
சிறந்து படைப்பில் திகழ்பவனாம்.

உணர்வில் ஒன்றி உணர்ச்சிகளை
உயிராய்க் கருவில் உருவாக்கி
உணர்ந்து சிந்தனையால் தெளிந்து
உலகில் வாழ வைப்பவனாம்.

தனது வாழ்வு இன்னலிலே
தனது படைப்போ மக்களிலே
மணமே சேர்த்து வாழ்வித்து – தான்
மறைந்தும் உலகில் வாழ்பவனாம்.

23/03/2014 சுடர்லளி

**எம்மைக் காக்கும் !**

அழுக்கடை நாற்றம் மூக்கினைத்துளைக்க
அகப்பட்டவுணவை விழுங்கிக்கரைந்து
குழுக்களாயுண்ணத் தனதினத்தாரைக்
கூவியழைக்கும் காக்கையைப் பாரீர்.

பருத்த உணவைப் பலபேரொன்றாய்ப்
பற்றுடன் தூக்கி ஒன்றுமை காட்டி
இருப்பிடம் நோக்கி அணியுடன் செல்லும்
எறும்பதனொற்றுமை எமக்கதுவுண்டோ?

பறிப்பதுவொன்றே தறிகெட்ட தொழிலாய்
பண்பதுமின்றி உண்மையைக் கொன்று
நெறியற்ற வாழ்வை நிலைத்திட அலையும்
நீசனாய்ச் செல்வோர் கண்டதுயென்ன?

அடுத்தவன் குடியை அடுத்துக் கெடுத்து
அகப்பட்டயின்பம் கொள்முதலதுவாய்
மடுப்பதே தொழிலாய்க் கழிந்தன வாழ்வாய்
மண்ணில் விளைந்த அறுவடை தீதாய்!

போட்டிப் பொறாமை காட்டிய பெருமை
போக்கிரித் தனத்தால் மனிதம் தொலைந்து
மூட்டிய பகையால் ஒற்றுமை நீங்கி
முயன்றிங்குழைத்ததன் பெறுபேறென்ன?

அன்பு பண்பு ஐக்கியம் நேசம்
அவனியிற்திகழ ஆக்கி நற்பணியால்
என்றும் மனிதவுள்ளம் வாழும்
என்ற இலக்கே எம்மைக் காக்கும்!

27/12/2015 தினகரன்

## ஒற்றுமைக்காய் உழைப்பவரெங்கே ?

மனிதநேயம் மண்ணில் புதைத்திட
மனதில் எண்ணும் மனிதா!
புனிதக் கொள்கை தமது வழியாய்
புயலாய்ச் சீறுதல் சரியா?
நித்தம் நனியில் சமூகச் சீர்கேடதிகம்
தொடருமிவ்வேளை
தனியோர் பாதையில் தமதே நாடாய்
தமக்குள் வகுத்தல் முறையா?

மண்ணில் மாந்தர் சமயம் பலதை
மதித்து வாழ்தல் நியதி.
எண்ணில் எழுத்தில் பேச்சில் மொழியில்
எவர்க்கும் உரிமையிங்குண்டு.
புண்ணில் வேலாய் மனிதம் தொலைக்க
புரியாக் கொள்கை வெறியை
உண்மையாக்கிப் பிறருரிமை பறிக்க
உலவிடல் நன்மைச் செயலா?

உடல்களொன்றே உருவமொன்றே
உயிரும் ஒன்றிறை படைப்பில்
இடர்கள் செய்து கலகம் புரிந்தால்
இனத்தில் ஒற்றுமை நீங்கும்.
படரும் ஒற்றுமைக் கொடியைப் பிடுங்கும்
பண்பா மனித தர்மம்
கடந்த காலம் உணர்த்திய பாடம்
காற்றில் பறந்தது என்ன?

இந்த நாட்டில் வாழ்வோ ரெவர்க்கும்
சொந்தப் பூமியிதன்றோ
வந்தான் வரத்தான் என்போரெவரும்
வந்து பிறந்ததேயுண்மை.

சிந்தையில் தெரிந்தும் சீர்குலைப்போரை
சிறையிட வேண்டும் மக்கள்
வெந்தது போதும் வேதனை வேண்டாம்
வேற்றுமை நீக்கிடு நெஞ்சில்.

ஒற்றுமைக் கயிற்றால் பிணைந்திட வேண்டும்
ஒவ்வொரு சமூகத் தலைவரும்
பற்றிந்த வழியால் நிமிர்ந்திடும் நாடு
புரிந்திட வேண்டும் கற்றோர்
புற்றிலே பாம்பாய் அச்சங்கொள் நிலையால்
பூண்ட நல்லுறவும் நீங்கும்
இற்றரை மக்கள் யாவரும் சமமே
என்றிங்குழைப்பவரெங்கே?

29/06/2014 சுடர்ஒளி

## மனிதா வாழ்ந்திடு !

குலமது உயர்வென
குணமிதில் இகழ்வதாய்
நிலவிடும் மனிதரில்
நிகழ்துயர் தொடர்வதாய்
பலம் நலச் செயலினை
பதி இழி நிலையதாய்
புலம்பிடும் உளங்களில்
பொறுமையும் கனவதாய்!

இருளது பரவிடில்
இருப்பது மறைந்திடும்
அருளவன் படைத்தது
அவனியில் பணிதர
கழிந்திடும் வாழ்வினை
கருணையில் நிகழ்த்திட
உருவினி லுண்மையின்
ஒளியெடு கதிர்விடு!

வாழ்வினில் ஏனிது
வதைபடு மிடமதாய்
ஊழ்வினை ஆக்கினை
உணர்வுயிர் மனிதனே
மூழ்ந்திடு முறவினை
முறையற்ற இலக்கதாய்
சூழ்வது கவலையாய்
சுகமதில் மறைந்திடும்!

அன்பினால் வம்பினை
அகற்றிடு தெளிவுறு
துன்பியல் வாழ்வது
துயரினில் அழிவுறும்
இன்பமாய் உளமதே
இழிசெயல் நீக்கிடும்
எண்ணிடு வுணர்ந்திடு
எழுந்திடு வாழ்ந்திடு!!!

தமிழ் வளர்த்து தகைசேர் பணியிறுத்து
தாய்த் தமிழைக் காத்திட்ட ஆன்றோரை - இன்றேனோ
புறக்கணித்து புதுமைசொல் நவீனத்தார்
மறப்பது முறையா?

மொழியே தமிழ்த்தாயை கழுத்திலணிகலனாய்
அழியாது காத்தார் சான்றோர் - கழியும்
வாழ்விலன்னோர் பணி மீட்டுவதே
நல்லோர்க்கழகு!

எத்தனை மொழி எவர் நாவிலுரைத்திடினும்
சத்தான தமிழமுதின் சுவை நூறு – நித்தம்
அறிவின் வழியுணர்த்தும் நன்நூல் தெளிவூக்கும்
செறிவாம் தமிழ்த் தேடு!

முற்காலவறிஞர் அவை சிறப்பித்தார்
வற்றாப் புலமையின் மணம் காத்தார் - கற்றோர்
பலநூறு தமிழ்க் காவியங்கள் தந்துலகில்
நிலவிடச் செய்தார் பார்!

வாழும் தமிழையெமை வாழ்த்தும் தமிழைச்
சூழும் இன்னலை யாம் சகியோம் - என்றும்
எங்கள் தமிழ்மொழி வையம் சிறந்திட
எழுத்துப் போர் தொடுப்போம்!

பேச்சில் மூச்சில் வாழ்வது தமிழில்
ஏச்சில் ஏய்ப்பது நன்றா – புத்தியில்
சிந்தையறிவிலார் மனிதக் குணமிலார்
மந்தையாய்ச் செல்லல் நன்று!!!

பூங்காவனம், இதழ் 26

மனிதனாய்ப் படைத்து பொற்பு
மாநிலந் தன்னில் வைத்து
புனிதனாய் வாழச் செம்மைப்
பாதையை ஈந்தா னேகன்!
குனிந்திட வைக்கும் பொல்லா
கீழ்மையில் வீழ்ந்து தாழ்ந்து
இனியநல் வாழ்வைத் தீய்த்து
இடரினில் உழல லாமோ?

எத்துறை நோக்கினாலும்
எங்கணும் தீய்மை ; பொய்மை!
நித்தமும் இழப்பு ; ஞாலம்
நிமிர்ந்ததா? ஓலம் ; யுத்தம்!
சத்தியச் சுடரைக் காணா
குருடராய் செகத்தி லானார்!
புத்தியுங் கலங்கு தந்தோ
புரிந்தவர் மௌனி யானார்!

சிறந்தோங்க இறையை நெஞ்சில்
நிறுத்தாது தூய்மை வாய்மை
துறந்ததால் தானே வாட்டும்
துயர்தரும் வன்முறைகள்
மறந்ததேன் மனிதா இறுதி
மறைவது உறுதி என்று?
அறவழிக் காத்துப் பேணி
அவனியில் உய்வோம் வாரீர்!

தொட்டிலிற் குழந்தையாகி
தூங்கினோம் ; இளமை எய்தி
கட்டிலில் இன்னும் தூங்கி
காலத்தை மாய்ப்பு வீணாய்!
எட்டிய அறிவால் செம்மை
எழுச்சியை நோக்கிடாது
வட்டியை விரும்பும் உள்ளம்
வீழ்ச்சியை உணர்வதில்லை!

படிப்பினைப் பெற்றபின்னும்
பணிகளை மறக்கலாமோ?
துடிக்குது சமூகம் பொல்லா
சோதனை இடரில் சிக்கி!
வடித்துநாம் நேர்மைத் திட்டம்
வகுத்துநற் பணிகள் பூண்டு
இடித்திடர் மதில்கள் நின்றால்
எய்திடும் சமூகம் மீட்சி!

08/03/2009 சுடர்ஒளி

## மக்கள் நலன் பாடுவோம் !

ஆதியெனப் பூவுலகில்
அவதரித்த மனிதயினம்
நீதியிலாக் கொள்கையினால்
நேசங்கள் தனைமறந்து
பாதியெனப் பலபிரிவாய்
பரிதவிக்கும் நிலையொழிந்து
ஓதியுயர் நெறிவழியில்
ஒற்றுமையா லிணைத்து நின்று!

அன்பு தரும் சாந்தியினை
அகமதிலே இருத்திவிடா
இன்பவழி தருமுறவை
இழிவெனவே போக்கிவிடும்
உண்மையற்ற யிதயங்களில்
உயர்வுபெறும் விதைவிதைத்து
வன்முறைகள் மறந்துவுயர்
வாய்மை வழியுணர்வுபெற!

உள்ளத்தில் விஷம் தேக்கி
உதட்டிலே தேன் சிந்தும்
கள்ளமுள்ள நெஞ்சினரைக்
கருத்திலே பிரித்தறிந்து
பள்ளத்தில் வீழாதவரைப்
பண்புடன் வாழ் முறைகாட்டி
அள்ளுமுயர் அறநெறியை
அவனியிலே யறிந்து நிற்க !

உறவுகளி லுண்மையெனும்
உயர்விதையை நட்டுஅதில்
அறவழியி லமைதியுடன்
அன்புடனே வகுத்தெடுத்து
நிறவெறியை இனவெறியை
நீசமென நீக்கித் தீதாய்
வறண்டபாலை நெஞ்சங்களில்
வாஞ்சையுள்ள நீருற்றி!

பகைவழியில் தினம் கொடுமை
பலம்புரிந்து வாழ்க்கையிலே
வகையிழந்து நல்லோரின்
வாய்ப்பின்றி வாடுகின்ற
நகைப்புற்ற மக்கள் மனம்
நலவறிந்து மெய்கொடுத்துத்
தகை சேர்த்து ஒற்றுமையில்
தோள் சேர்த்து யுறவில் நிதம்!

எழுத்தில் தீப் பேச்சினிலே
எழுகின்ற பிரச்சினைக்கு
பழுதில்லா நற்பணியால்
பலம் சேர்த்துத் தீவினைகள்
நழுவியே கழிந்தோடி
நலமளிக்கும் சாந்தியினைத்
தழுவியே தினம் வாழ்வில்
தரமான பலமதுவாய்!

7/12/2008 சுடர்ஒளி

## முகநூல்

முகநூலே இன்றுணரும் நெஞ்சம்
முழுவதுமாய் மானிடரும் தஞ்சம்
சிந்தையினை யூட்டி
சிறக்க வழிகாட்டும்
சகவாழ்வில் பொழுது மதில் மிஞ்சும்!

பன்னாட்டுறவுகளும் ஊரும்
பண்போடு நட்புகளும் சேரும்
கள்ளமற்றுறவில்
கனிவு தரும் வரவு
தன்மை பெற அன்பு வழி பாரும்!

கெடுதிவினைக் காட்சியினைத் தள்ளி
கெடுப்போரின் உறவுகளில் கொள்ளி
வைத்தறிவு வழியால்
வரும் சிந்தைக் கருவை
எடுப்போர்க்கு நலவு தரும் பள்ளி!

எழுத்தாளர் பணிக்குண்மைப் பாலம்
எழுதிவரும் பல படைப்பும் சீலம்
கழுத்தறுப்போர் செயலை
கருத்திலெடுத்தறிவை
விதைப்போர்க்கு கைதருமிக்காலம்!

எதிர்காலச் சந்ததியின் வித்து
எழும் நிகழ்காலத்தின் சத்து
சமூகத்து மன்றில்
சாந்தோர்க்கு என்றும்
உதிரும் நல் படைப்புகளும் சொத்து!

நிகழ்காலவுலகத்தின் போக்கு
நினைத்துணர்வில் வளம்பெறவே ஊக்கு
கற்றோரின் உலகம்
சதியவலம் அகற்றி
சகலதிலும் பணிபுரியத் தேக்கு!!!

பூங்காவனம், இதழ் 30

ஆடுகள வாழ்க்கையதன் கோலம்
ஆய்ந்துணர்ந்து பார்த்துணரல் சீலம்
மேடுபள்ளம் அறிந்துண்மை பாரு
மேன்மையுறும் முறையறிவாய் நீரு!

பசிதாகம் பொறுத்திருந்த லச்சம்
பகையுணர்வால் வாடியதே மிச்சம்
குஷிதேங்கித் தொடர்ந்ததில்லை காலம்
குணமேற்ற மனமெங்கும் ஓலம்!

அகதியெனும் பெயரேற்ற வாழ்வு
அலைந்ததனால் கவலையொன்றே மீழ்வு
சகதியென்ற பாதையிதை நோக்கா
சார்ந்திருப்போர் எண்ணமிதிற் தெளிக!

ஓடமதில் செல்லுதல்போல் துடிப்பு
உதவாதோர் துடிப்பில் பொய்முடிப்பு
ஆடவிட்டார் மேடையதில் நாளும்
ஆயுமென்ன தொடர்நாடகம் மீளும்!

கல்வி நல்லொழுக்க மற்று நாறும்
கனதி மக்கள் வாழ்விலேது தேறும்
புல்லெரென நாமாதல் முறையோ
புகுந்திட்ட இவ்வாழ்க்கை குறையோ!

எங்களுக்கும் காலம் வருமென்று
ஏமாற்றிப் பிழைத்தல் தீதின்று
தங்களுக்காய் ஆகுமட்டும் நீதி
தரம் கண்டு கொடுப்பதில்லை சேதி!

உணராதோர் உள்ள மனப்போக்கு
உணர்த்தாதோர் பொய்வாக்கை நீக்கு
இணங்கிவரும் விடிவொன்று நாட்டில்
இருப்போர்கள் எழுதிவைப்பார் ஏட்டில்!!!

## பாதை மாற்றும் போதை

போதை தரும் வஸ்துக்கள் உலகில் தீய
போக்கற்ற செயல் பலதின் வித்தாமிங்கு
வாதையுடல் வலுவிழக்கும் வளமாம் வாழ்வில்
வன்செயல் தீமைகளைத் தூண்டி வாலிபம்
பேதையென மாறியுளம் சோர்விழந்து
பெருநோய்கள் பெரும்பாவ வினையும் சூழ்ந்து
வேதனையே தாங்கிப் பலர் மார்க்கம் மறந்து
விளைக்கின்ற கொடுமை பல எமது நாட்டில்!

குடு, கஞ்சா, அபின், சிகரெட், சுருட்டு, பீடியும்
குடிக்கின்ற மதுவகைகள் ஒன்றாரெண்டா
படுபோதை மயக்கத்தால் உடலுறுப்பும்
பற்களதும் நிறமற்று உதடும் கறுத்து
நடுங்கியுடல் சுவாசப்பை பாதிப்புற்று
நலங்கெட்டு இரத்த அழுத்த நோயில் வாடி
கடுமைத் தீதெண்ணத்தை உள்ளமூக்கும்
காவாலிச் செயலாலே வாழ்வும் மடியும்.

புற்றுநோய், என்புநோய், எம்பீசீமா
பிசினோஸிஸ், குடற்புண், உயர்குருதியமுக்கம்,
கற்றயற் குருதிக்கலன் நோய், பெருநாடி வீக்கம்,
களதொண்டைப் புற்றுநோய், சிறுநீர்ப்பைக்கட்டி
வற்றாத நெஞ்செரிவு என்றின்னும் பலவாய்
வாழ்விலே சோதனை வேதனை சேர்க்கும்
பற்றிலா வாழ்விது பாதகத் தீயில்
பாவியாய் மூழ்கிட முயலுகிறாயே!

அழிவுள்ள உலகமிது வீணாசைக் கெல்லாம்
அலையாதே அல்லாஹ்வின் பிடியுன் முன்னே
பழிசுமப்பாய் உந்தனின் சந்ததியினருக்கும்
பாவியென சமுதாயமொதுக்கி வைக்கும்
இழிவுதரும் வேதனையே இம்மை மறுமை
ஈடேற்றமில்லாமல் நரகில் புகுவாய்
விழித்தினியும் உறுதியெடு நல்லோனாக
விரைகின்ற மௌத்துமுன் திருந்திவிடுவாய் !

14/09/2018 விடிவெள்ளி

## மனிதம் எங்கு சென்றதுவோ ?

குடியும் கூத்தில் அடியும் தடியும்
குணமும் மறந்து பிணக்கும் தொடர
முடியா வன்மை தொடரும் தன்மை
முடிவும் தெரியா மனிதமெங்கு சென்றதுவோ?

பொய்யும் புரட்டில் மெய்யைப் புதைத்து
புகலுமறிவை அகத்தில் மறந்து
பையில் தீதைப் பறித்துச் சேர்த்துத்
தொய்யுமுறவாய் மனிதமெங்கு சென்றதுவோ?

போட்டி பொறாமையில் மூட்டும் பகையும்
போலியுறவில் கேலி வாழ்வாய்
ஆட்டும் மமதையை அவனி விளைத்து
அடங்கித் திகழா மனிதமெங்கு சென்றதுவோ?

இனத்தின் மனத்தில் கனத்தை விதைத்து
இதயப் பலத்தில் அதர்மம் நிலைத்து
சனத்தின் சிந்தை சுயத்தை இழந்து
சறுகிட வைத்து மனிதமெங்கு சென்றதுவோ?

தலைமைத் தலைக்குள் பதவிச் சுவையும்
தன்மையுணர்வும் புன்மைச் செயலில்
விலையாய் உயிரும் உடமையிழந்து
வினையில் வாழுது மனிதமெங்கு சென்றதுவோ?

இலங்கையெம் தேசம் துலங்கியதன்று
இனத்தில் பகையால் கலங்கியதின்று
நலங்கள் புரிவார் இலங்காதிருந்தே
நாசம் விளைத்தார் மனிதமெங்கு சென்றதுவோ?

என்றுமிதுவே தொடர்கதையானால்
எங்கள் தேசம் மங்கியழியும்
நன்று ஒற்றுமைக் கரமும் சேர்த்திட
நாடி வருவீர் மனிதம் வாழும்

21/03/2018 நவமணி

**சந்தேகம் நீக்கு !**

சந்தேகம் என்னும் நோய் புற்று
சடுதியிலே தொற்றுவிடும் சற்று
சபல நினைவூட்டி
சண்டையினை மூட்டி
கலகத் தீ எரிந்தெங்கும் பற்றும்.

உகப்புறவை நட்புகளைத் தள்ளும்
நலவுகளைநீக்கிவேண்டுண்மை பல கொல்லும்
நன்மை வழி போக்கி
நீங்கிவிடா வளர்ந்து அது செல்லும்.

கண்காணா வதந்தியினால் கோபம்
கருத்துணர்வறியா மனம் வேகும்
புண்ணாக்கி நெஞ்சில்
புன்மைச் செயல் நஞ்சைத்
தூவியதால் பகை தொடர்ந்து போகும்.

சம்பவத்தைக் காண்கில்லார் கூற்றை
சீர்வழியாய் நம்பாதே கேட்டு
விசாரித்தால் நீதி
வினை செய்தல் நாதி
உண்மை வரும் தாமதித்தே சாற்று!

சத்தியத்தை சந்தேகம் நீக்கும்
சாந்திவழி பொறுமைப் பணி போக்கும்
சால்புடையோர் வாக்கு
சார்ந்துயிதை ஊக்கு
சமூகத்தில் நல்லுறவைத் தேக்கு!!!

## கண் திறக்குமா ?

குப்பை கொட்டித் தப்புச்செய்து
குடியிருப்போரின் சூழல் கெடுத்து
அப்பும் தூசின் ஆபத்தறிந்தோர்
அவதியில் என்றும் தவிப்பது முறையா?

சுற்றாடல் பேணும் கற்றார் கூற்றையும்
சுழற்றி வீசி நிறைக்கும் கழிவால்
பற்றோர் வாழ்வை இம்சைப் படுத்தி
பகடியிதுவாய்ப் பிதற்றல் சரியா?

இயற்கை வளங்கள் இறையின் கொடையாம்
இதனை யுணர்ந்தும் அதட்டி வைத்துக்
கயமை புரிந்தும் பலத்தால் மிரட்டிக்
காரியம் பார்ப்போர் இலக்கு என்ன?

எத்தனை முறைகள் நித்தம் கேட்டும்
ஏய்ப்போரென்று துவேஷம் கலந்து
புத்தியிலெண்ணா சத்தியம் பேணா
புகலார் நீதி அகத்தில் பீதி!

மக்கள் நலனை நாட்டிலுணர்ந்து
மாய்க்கும் நோய்களை ஆய்ந்தறித்து
உக்கும் குப்பைக்குத் தனியிடமமைத்து
உதவி செய்வதே அரசின் பொறுப்பு?

போராட்ட வாழ்வில் ஆர்ப்பாட்டங்கள்
போக்கற்ற செயலால் ஏக்கமும் கொண்டார்
பாராமுகமாய் பதவிச் சொகுசில்
பண்பு மறந்து வன்மம் புரிந்தீர்.

தொடரும் மக்களின் புரட்சியெதிர்ப்பால்
தொடரா ஆட்சி இடறும் முடியும்
உடனே மக்கள் கடமையேற்பீர்
உணராத் தொடர்ந்தால் பிணக்கே காண்பீர்!

14/12/2018

**சீதனம் ஒழிக்க முயல்வாய் !**

சீதனமாம் சீர்கேடாய் வழியொன்றிந்த
சீர்மையிளங் கன்னிகளின் வாழ்விற்புகுந்து
ஆதாரவொன்றில்லாத புயலாய் மாறி
அன்பில்லா வனப்பிளமைச் சிறகொடித்து
பாதகத்தைப் புரிகின்ற பணத்தின் முன்னே
பரிதவிக்கும் குமருகளின் கண்ணீர் கண்டும்
சாதகமோர் கருத்தில்லா சமூகம் தூங்கி
சிந்தைகொண்டெழாத அமைதியிங்கே

பெண்களாய்ப் பிறந்ததுவா குற்றமிங்கு
பெண்தானே எமையீன்ற தாயுமிங்கு
கண்ணுக்கு கவர்ச்சிமிகு கன்னிவேண்டும்
காசு, பொருள், நகைநட்டு, வீடு, கடைகள்
எண்ணுமுயர் வாகனமும் பெற்று முடிக்கும்
எண்ணமே வாழ்வுக்குத் தீயாய் மாறும்
புற்றுள்ள நெஞ்சத்தோர் மடமைநீக்க
புறப்படட்டும் தீனிளைஞர் படையுமிங்கே.

திருமணத்தின் பெயராலே கொள்ளையடிக்கும்
திருடர்கள் நிறைந்துள்ள காலமிங்கே
பெரும் செலவில் தீன்பண்டம் சாப்பாடுகள்
மருதோன்றி கால்மாறிப்போகும் செலவு
கருத்தில்லா மாப்பிள்ளைச் சாப்பாடென்று
கன்னியரின் பெற்றோரை உரித்தெடுத்து
பொருள் வேண்டிக்கடன் சுமையுமேற்றிவைத்து
பெருச்சாளிக் கைவரிசை மாறுவதெப்போ!

கல்யாணச் சந்தையிலே மந்தைகளாய்
காளையரே மாறாதீர் உமக்கு மொருநாள்
நல்லதொரு பெண்குழந்தை பிறந்தால் நீரும்
நினைத்தழுவாய் நீர் செய்த மாயந்தன்னை
இல்லாத ஏழைக்கு வாழ்வளித்து
இஸ்லாத்தின் நெறிகாக்க முனைவாயிங்கே
வல்லோனின் அருள் சூழும் பெருமான் நபியின்
வழிசெல்வாய் சீதனம் ஒழிக்க முயல்வாய்

12/10/2018 விடிவெள்ளி

## நீதி ஜெயிக்கும் !

நீதி விலையற்ற ஆதியவன் தீர்ப்பாம்
ஓதி நிலைத்திருக்கும் - மேதினியில்
சினம் மிகைத்துப் பகை மூட்டுவதால்
மனதிலில்லை அமைதி!

ஆட்சி செலுத்துபவன் நீதி செலுத்துவதே
மோட்சவழி நல்கும் - வாட்டும்
ஆணவமிடுக்கில் நிதானம் விடைபெற்றால்
பேணும் குணம் வருமோ?

பணம் புகழ் பெருமை பதவிப்போதையேறி
குணமின்றித் தீதிழைத்தல் - பிணமாய்
மனிதமிழந்து புனிதம் கெடும் வாழ்வில்
இனிமை வராது காண்!

நீதியாலுலகிற் பணி நலவு பலசெய்து
போதனை செய்தற்கே மார்க்கம் - சாதி
இனந்தனது மட்டுமாய் முயன்றுழைக்கும்
மனப்பிணி நீக்கு!

வலியோனெளியோன் எனும் பாகுபாட்டில்
நலியும் நல்லிணக்கம் - பலியாய்
இல்லானையொதுக்கி வல்லானையுயர்த்திடில்
கொல்லுமிறை நீதி!

அதிகார போதையில் குதியாட்டமிட்டு
சதிசெய்து வாழ்ந்தோர் வரலாறு – பதியில்
நீதி நூற்களில் நிறைந்த படிப்பினையாம்
சேதி படித்தறிந்துணர் !

15/03/2019 விடிவெள்ளி

## வேண்டாம் வீதி விளையாட்டு

வீதியினை விளையாட்டு திடலாய் ஆக்கி
வினைகளையே பரிசாக வாரி வாராய்!
மோதல்களால் உறவுகளை முறித்து நல்லோர்
மனங்களிலே பகைமையினை மூட்டுகின்றாய்!
நீதியிலா சிந்தனையால் நிந்தை சூழும்
நேர்மையிலா போக்குகளால் சீர்மை மாயும்
பீதியினை பாதசாரி நெஞ்சி லேற்றும்
வீதிவிளையாட்டெதெற்கு? சிந்தி குந்தி!

வாழ்விலிங்கு ஓய்வுதன்னைக் கழிக்க வல்ல
விளையாட்டு, உடற்பயிற்சி தேவை ; ஆனால்
ஆழ்ந்தறிந்து ஒப்பான இடத்தைத் தேர்ந்து
அகமகிழ்ந்து விளையாடு ; பங்கமில்லை!
பாழ்வழியில் சிந்தனையைச் சிதைத்து வீணாய்
பாதையினை மைதான மாக்கு கின்றீர்!
வீழ்கின்றார் முதியோரும் சிறயோ ரும்பார்!
வீண்பழிகள் ; முறைப்பாடு ; பகைமை ; வெட்கம்!

வாலிபநல் பராயத்தை பாழாக்காதே
வல்லோனும் ஈந்தவுடல் உயிர்க்கு என்றும்
வேலியெனும் காப்பாகும் ; கவசமாகும்!
வெற்றிக்கு வித்தாகும் பணிகள் ஏற்பீர்!
போலியொளிர் நாகரிக மோகம் நீக்கி
பொன்னான நன்நெறிகள் பேணிக் காப்பாய்!
கேலி குழா நல்வாழ்வு பணிகள் பூண
கிடைத்துள்ள பருவத்தை முதலாயக் கொள்வீர்!

கல்விக்காய்ப் பணியீந்து வாழ்வில் நித்தம்
காசினியில் ஒளிர்ந்துவரும் மேதை, சான்றோர்
நல்லாசான், பேரறிஞர், புலவர், போற்றும்
நாவலர்கள் காவலர்ககள் சமூகத் துக்கு!
சொல்லற்கு அரியபல நூல்கள் ஈந்தார்
சோர்வுக்குள் அயர்ந்திடாது கற்றுத் தேர்ந்து
அல்லவற்றை நீக்கிப்பெரும் பணிகள் ஏற்று
அவனியில்நீ உயர்ந்துவிடில் சமூகம் ஏத்தும்!

வேலையற்று வீட்டுக்குப் பாரமாகி
வேண்டாத கருமங்களில் சிக்கி வாழ்வை
பாலைவெளி யாக்கிப்பின் மாய்ந்துபோன
பரிதாப மானிடரின் கதைகள் உண்டு!
சாலைகளில் விளையாடும் போக்கு நீக்கி
சீர்மைதரும் நன்நெறியில் சிறந்து நின்றால்
சோலையாகும் வாழ்வதுவும் ; வசந்தம் பூக்கும்
வளமான இளமையதும் செழுமை சேர்க்கும்!

15/03/2009 சுடர்ஒளி

## நூலாசிரியர் பற்றி...



கவித்துவம் கைவந்த இயல்பினைக் கொண்டவர்கள் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள். படிப்பறியாப் பாமர மக்களால் எதுகை மோனைகளுடன் பாடப்பட்டுள்ள கருத்துப் பொதிந்த பல்வகை நாட்டார் பாடல்கள் இதற்குச் சான்றாகும். சாய்ந்த மருதூர் இவ்வகையில் களைகட்டி நின்ற ஓர் ஊராகும். இவ்வூரைப் பிறப்பிடமாகவும் ஏறாவூரைப் புகலிடமாகவுங் கொண்டு எழுத்துத் துறையில் ஏறுநடை போடுகிறார் மருதூர் ஜமால்தீன் அவர்கள்.

உயர்தர வகுப்புக் கல்வியை முடித்தபின் தர்காநகர் அரபுக் கல்லூரியில் மௌலவிப்பட்டம் பெற்று இவரை கவித்துவ வேட்கையும் சூழற் தாக்கங்களும் எழுத்துத் துறைக்குள் ஈர்த்தன. தினகரன் வீரகேசரி சுடரொளி முதல் சகல தேசியப் பத்திரிகைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்தன.

இவரது கலை இலக்கியப் பணிகளைப் பாராட்டி 2016ம் ஆண்டு நடைபெற்ற "இஸ்லாமிய இலக்கிய மகாநாட்டில் கௌரவ விருது வழங்கப்பட்டது. ஏறாவூர் கலாச்சாரப் பேரவை சாய்ந்த மருதூர் "மருதம் கலைக் கூடம் ஆகியவற்றால் கவிமொழி விருதுகள் வழங்கப்பட்டன. மேலும் சாமஸ்ரீ (சமூக ஜோதி) கவிச்சுடர் கலைவேந்தர் விருதுகளையும் பெற்றுள்ளார். அத்துடன் மாகாண. மாவட்டத் திறந்த போட்டிகளிலும் விருதுகள் பாராட்டுகள் பெற்றுள்ளார்.

இவரது ஆக்கங்கள் காலத்துக்குக் காலம் தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளன. இவரது பதினோராவது கவிதைத் தொகுப்பாக "மனிதம் வாழும்" என்னுங் இக் கவிதை நூல் உங்கள் கரங்களுக்கு வருகின்றது. இவரது முயற்சி இடையீடின்றித் தொடர்ந்து தமிழுக்கு அணியூட்ட எமது வாழ்த்துக்கள்

கலாபூஷணம்
M.H.A. அப்துல் ஹலீம்.
BA. Dip in Edu.